# மட்டக்களப்பில் நுண்கடன் தடை

மாவட்ட அரச அதிபர் கலாமதி அதிரடி உத்தரவு



02

Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

**நக்கல்நமசிவாயம்**

“அரசியல் கைதி ஆனந்தசுதாகரனும் எலெக்சன் கேட்டிருந்தா ஈஸியா வெளிய வந்திருக்கலாம்... பார்லிமென்ட் போயிருக்கலாம்....”



மலர் : 01, இதழ் : 58 சார்வரி வருடம், ஆவணி மாதம் 24ஆம் திகதி புதன்கிழமை (09.09.2020) ஹிஜ்ரி - 1442, முஹர்ரம் பிறை - 20, 0115886187 பக்கங்கள் 12 விலை ரூ.20

# இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்படுவது தடைசெய்யப்படும்!

## பிரதமர் மஹிந்த நேற்று அதிரடி அறிவிப்பு

இலங்கையில் மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படுவது தடைசெய்யப்படவுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்றுக் காலை நடந்த ஆளுங்கட்சிக் கூட்டத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்த யோசனையை அறிவித்தார். இதற்கு மாற்றீடாக வெளிநாடுகளில் இருந்து மாட்டிறைச்சியை இறக்குமதி செய்யவும் அனுமதி வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் எதிர்வரும் வரவு - செலவு திட்டத்துக்கு பின் இந்த யோசனை அமுல்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ●

# மரணதண்டனைக் கைதி எம்.பி.யாவதா? சபையில் எதிர்க்கட்சி போர்க்கொடி!

## கறுப்புச்சால்வை அணிந்து அமளி; அமர்வை புறக்கணித்து வெளிநடப்பு

• **சபை செய்தியாளர்**

மரணதண்டனைக் கைதியான பிரேமலால் ஜயசேகர நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டமைக்கு எதிர்ப்பைத் தெரிவித்து எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று கேள்வியெழுப்பி சர்ச்சையை எழுப்பியதால் சபையில் அமளி துமளியேற்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினராக பிரேமலால் சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட கையோடு ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல, 2010ஆம் ஆண்டு சரத் பொன்சேகா சிறையிலிருந்து நாடாளுமன்றம் வருவதற்கு தடைவிதிக்கப்பட்டதாக கூறியதுடன், அதற்காக அப்போதைய அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் சபைக்கு வழங்கிய விளக்கத்தையும் வாசித்தார்.

இதனையடுத்து பதிலளித்த அமைச்சர் தினேஷ் குணவர்தன, எம்.பி. ஒருவர் சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் அதனை எவரும் கேள்விக்குட்படுத்த முடியாதென சுட்டிக்காட்டினார். இதனையடுத்துப் பேசிய சரத் பொன்சேகா...

02



# தலைவர் பதவிக்கு ஆசைப்படுவோருடன் ரணில் நேற்று மந்திராலோசனை!

## பிரதித் தலைவர் திங்கள் நியமனம்



ஐக்கிய தேசியக் கட்சிக்கு புதிய பிரதித்தலைவர் ஒருவர் எதிர்வரும் திங்கட்கிழமை நியமிக்கப்படவுள்ளார்.

திங்கள் பிற்பகல் 3 மணிக்கு கட்சியின் செயற்குழு கூடவுள்ளது. இந்தக்கூட்டத்தில் புதிய நியமனம் செய்யப்படும். எனினும், பிரதித் தலைவர் யார் என்பது இறுதி செய்யப்படவில்லை, பல பெயர்கள் பரிசீலனையில் உள்ளன.

02

# சஹ்ரானை இயக்கிய சக்தி யார்? தேடவேண்டுமென்கிறார் ரவூப் ஹக்கீம்



### ஈஸ்ரர் தின தாக்குதலை விசாரிக்கும் ஆணைக்குழு முன் சாட்சியம்

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பிற்கோ அல்லது அதன் தலைவர் சஹ்ரானுக்கோ ஐ.எஸ். அமைப்புடன் நேரடி தொடர்புகள் கிடையாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

02

# தமிழகத்தில் சிக்கிய பொலிஸ் உத்தியோகத்தர் அங்கொட லொக்காவுடன் தொடர்புபட்டவரா?

## சுரேஷ் என்ற பெயர்கொண்ட நபரைத் தேடி வலைவீச்சு

தமிழகத்தில் அண்மையில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபருக்கும், பிரபல போதைப்பொருள் வர்த்தகரான அங்கொட லொக்காவிற்கும் இடையில் தொடர்புகள் காணப்படுகின்றனவா என்பது தொடர்பிலான விசாரணைகளை இந்திய பாதுகாப்புப் பிரிவினர் ஆரம்பித்துள்ளனர்.

அங்கொட லொக்காவின் சகாக்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் பொதியில் காணப்பட்ட முத்திரை, சப்புகஸ்கந்த பகுதியில் கைப்பற்றப்பட்ட 23 கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருளிலும் காணப்பட்டதாக ஊடகங்களின் வெளியான செய்திகளை அடிப்படையாகக்...

02



# கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு அதிகாரங்களை வழங்கக் கோரிக்கை!

### கலையரசன் எம்.பி. நாடாளுமன்றத்தில்



அம்பாறை மாவட்டத்தில் 30 வருடகாலமாக இயங்கிவரும் கல்முனை வடக்கு பிரதேச சபைக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படாமையினால் அந்த பிரதேசத்தில் இன ரீதியான முறுகல் நிலை இருந்துகொண்டே இருக்கிறது. ஆகவே, அந்த பிரதேச சபைக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென்று தமிழ் தேசியக்...

02

# 19 ப்ளஸ் உருவாகின்றது 13 பாதுகாக்கப்படும்!

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



அரசியலமைப்பின் 19 ப்ளஸ் திருத்தத்தை தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிக்கின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ, பத்திரிகை நிறுவனங்களின் பிரதானிகளை நேற்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தியபோதே இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்டுள்ள 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என தெரிவித்த அவர், அதற்கு பதிலாக தாம் 19 ப்ளஸ் திருத்த வரைவை தயாரிக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

02

# தங்க இறக்குமதியில் 15வீத வரி நீக்கம்

## வர்த்தகர்கள் நிர்க்கதி!



தங்க இறக்குமதிக்கான 15 வீத வரி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் திடீரென நீக்கப்பட்ட நிலையில், தங்க வர்த்தகர்கள் தங்கத்திற்கான விலையை நிர்ணயிக்க முடியாது நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

தங்க இறக்குமதியின்போது அரசாங்கத்தினால் இதுவரைகாலம் 15 வீத வரி அறவிடப்பட்டிருந்தது.

தங்கம் மற்றும் ஆபரண ஏற்றுமதியின் போது, உண்மையான வருமானத்தை இதன்மூலம் வெளிக்கொணர முடியாத நிலை ஏற்பட்டதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இரத்தினக்கல் மற்றும் ஆபரண கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சின் எதிர்கால திட்டங்கள் தொடர்பிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற வேளையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

02

# தீப்பற்றிய கப்பலை ஆராய மேலும் நிபுணர்கள் கல்முனை விரைவு

**- பாரூக் ஷிஹான்-**

நியூ டயமன்ட் கப்பலை ஆராய்வதற்காக மற்றுமொரு 11 பேர் கொண்ட குழு அம்பாறை மாவட்டம் கல்முனை பகுதிக்கு வருகை தந்துள்ளது.

இவர்கள் நேற்று முற்பகல் அம்பாறை சங்கமன்கண்டி கடற்பரப்பில் தீப்பற்றிய நியூ டயமன்ட் கப்பல் தொடர்பாக ஆய்வு....

02







*மரணதண்டனை கைதியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர, நாடாளுமன்ற உறுப்பினராக நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.*

| லொத்தர் | வாரம் | திகதி | ஆங்கில எழுத்து | இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| அத கோட்டிபதி | 1031 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 04ஆம் திகதி | B | 13 27 56 67 |
| கோட்டிபதி கப்ருக | 620 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 04ஆம் திகதி | Q | 02 35 63 69 |
| சனிதா வாசனா | 3361 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 04ஆம் திகதி | F | 03 13 22 30 |
| சுப்பர் போல் | 1205 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 04ஆம் திகதி | U | 14 21 62 65 |
| சனிதா வாசனா | 3362ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 05ஆம் திகதி | R | 07 58 60 71 |
| அத கோட்டிபதி | 1032 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 05ஆம் திகதி | Y | 22 28 30 34 |
| சுப்பர் போல் | 1206 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 05ஆம் திகதி | R | 02 33 41 47 |
| அத கோட்டிபதி | 1033 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 06ஆம் திகதி | X | 14 22 39 41 |
| சனிதா வாசனா | 3363 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 06ஆம் திகதி | L | 19 37 60 75 |
| சுப்பர் போல் | 1207 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 06ஆம் திகதி | P | 18 45 58 77 |
| கோட்டிபதி கப்ருக | 621 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 06ஆம் திகதி | Q | 05 15 40 45 |
| சுப்பர் போல் | 1208 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 07ஆம் திகதி | U | 25 43 48 66 |
| அத கோட்டிபதி | 1034 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 07ஆம் திகதி | H | 19 20 22 75 |
| சனிதா வாசனா | 3364 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 07ஆம் திகதி | A | 19 25 38 55 |

## முதலாம் பக்கத்தொடர்ச்சி...

### மரண தண்டனை....

எம்.பி. தாம் சிறையில் இருந்தபோது நாடாளுமன்றத்திற்கு வர அனுமதி மறுக்கப்பட்டு காட்டு நீதிமன்றம் மூலம் தடுக்கப்பட்டதாகவும் சாதாரண சிறைத்தண்டனைக்காக பல மாதகாலம் அடைத்து வைக்கப்பட்டதாகவும் கூறினார்.

எவ்வாறாயினும் நீதிமன்றத்தின் தீர்ப்பின் ஒரு பகுதியை வாசித்த சபாநாயகர் அதன்படியே தாம் செயற்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

அதன் பின்னர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பிய ஹரீன் பெர்னாண்டோ எம்.பி., மரண தண்டனை தீர்ப்பின் மற்றுமொரு பகுதியை வாசித்த போதும் சபாநாயகர் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

இதன்பின்னர் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபை அமர்வுகளில் பங்குபெறாது வெளிநடப்புச் செய்தனர்.

### 19 ப்ளஸ்...

ஜனநாயகத்தை பாதுகாக்கும் வகையில் கொண்டு வரப்பட்ட 19ஆவது திருத்தத்திலுள்ள சில குறைபாடுகளை நிவர்த்தி செய்து, 19ஆவது திருத்தத்திலுள்ள முக்கிய விடயங்களை பாதுகாக்கும் வகையில் 19 பிளஸ் அமையும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

19 பிளஸ் திருத்தத்தை தயாரிக்கும் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அந்த குழுவின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித்த சேனாரத்ன நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

1978ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அரசியலமைப்பில் காணப்படுகின்ற மிக மோசமான விடயங்கள் திருத்தி அமைக்கப்பட்டு, ஜனநாயகத்தை நிலைநிறுத்தும் வகையில் கொண்டு வரப்பட்ட 19ஆவது திருத்தத்தை இல்லாது செய்து, அதற்கு பதிலாக சர்வாதிகாரம் கொண்ட திருத்தமொன்றை மேற்கொள்வதற்கு அரசாங்கம் முயற்சி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன்படி, 19ஆவது திருத்தத்திலுள்ள ஊழல் ஒழிப்பு விடயங்கள், சுயாதீன ஆணைக்குழுக்கள், சிறந்த அரச நிர்வாக முறைமை உள்ளிட்ட முக்கிய விடயங்கள் தற்போது பாதுகாக்கப்பட வேண்டியவை எனவும் அவர் கூறியிருந்தார்.

அரசாங்கத்தினால் கொண்டு வரப்படவுள்ள 20ஆவது திருத்தமானது, நாட்டு மக்கள் மீதான தாக்குதல் எனவும் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டுகின்றார்.

19 பிளஸ் அரசியல் தலையீடுகள் இருக்காத வகையிலும், தேசிய பாதுகாப்புக்கு முக்கியத்துவம் வழங்கும் வகையிலும் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் வகையிலும் தயாரிக்கப்படவுள்ளதாக அவர் நம்பிக்கை வெளியிட்டார். அத்துடன், இந்த விடயத்திற்கு தாம் நாட்டிலுள்ள அனைத்து தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகளை நடத்த எதிர்பார்த்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பிலான ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாட்டு என்னவென ஊடகவியலாளர்கள் இதன்போது கேள்வி எழுப்பியிருந்தனர்.

13ஆவது திருத்தம் கட்டாயம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுடன், அதிலுள்ள மாகாண சபை முறை தற்போதுள்ளதை விடவும் வலுப்படுத்தப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறினார்.

நாட்டில் தற்போதுள்ள மாகாண சபை முறைமையில் குறைபாடுகள் காணப்படுவதாகவும், அதனை வலுப்படுத்துவதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

எனினும், புதிய அரசியலமைப்பில் 13ஆவது திருத்தத்திலுள்ள விடயங்களில் எவ்வாறான மாற்றங்கள் கொண்டு வரப்படவுள்ளன என்பது தொடர்பிலான வரைவு வெளியானதை அடுத்தே, அது தொடர்பிலான மேலதிக விபரங்களை தம்மால் கூற முடியும் எனவும் அவர் கூறியிருந்தார்.

எவ்வாறாயினும், 13ஆவது திருத்தத்திலுள்ள பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் தொடர்பிலான தமது நிலைபாட்டில் எந்தவித மாற்றமும் கிடையாது என எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருந்தார்.

### தங்க...

இதையடுத்து, தங்கத்திற்கு இதுவரை காலம் அறவிடப்பட்ட இறக்குமதி வரியான 15 வீதத்தை ரத்து செய்ய ஜனாதிபதி உடனடி நடவடிக்கை எடுத்திருந்தார்.

இதையடுத்து, நேற்று முன்தினம் இரவு தங்கத்திற்கு அறவிடப்படும் 15 வீத வரி நீக்கப்படுவதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்த நிலையில், தங்க வர்த்தகர்கள் உடனடியாக விலை குறைப்பை மேற்கொள்ள முடியாது நேற்றைய தினம் தடுமாறியுள்ளதாக அறிய முடிகின்றது.

குறிப்பாக கொழும்பு - செட்டியார் தெருவின் தங்க விலை பட்டியலின் பிரகாரம், ஒரு பவுண் தங்கத்தின் விலை ஒரு இலட்சம் ரூபா வரை காணப்பட்டது.

15 வீத வரி நீக்கப்படுமாக இருந்தால், அதனை 15 ஆயிரம் ரூபாவாக குறைக்கப்பட வேண்டிய நிலைக்கு தங்க வர்த்தகர்கள் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

ஏற்கனவே 15 வீத வரித் தொகையை செலுத்தி தங்கத்தை கொள்வனவு செய்துள்ளமையினால், உடனடியாக தங்கத்தின் விலையை குறைக்க முடியாத நிலை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

இதையடுத்து, தங்கத்திற்காக விலையொன்றை செட்டியார் தெரு தங்க வர்த்தகர்கள் நேற்றைய தினம் நிர்ணயிக்க முடியாது தடுமாறியிருந்தனர்.

அதுமாத்திரமன்றி, பழைய தங்கங்களை கொள்வனவு செய்யும் நடவடிக்கை நேற்றைய தினம் முற்று முழுதாகவே தடைப்பட்டது.

நேற்று முன்தினம் வரை ஒரு பவுண் 22 கரட் பழைய தங்கம் 88 ஆயிரம் ரூபா முதல் 90 ஆயிரம் ரூபா வரை வர்த்தகர்களினால் கொள்வனவு செய்யப்பட்டதுடன், 24 கரட் பழைய தங்கம் 99 ஆயிரம் ரூபா வரை கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

ஜனாதிபதியின் வரி நீக்கம் தொடர்பிலான அறிவிப்பை அடுத்து, பழைய தங்கத்திற்கான விலையை கூட நிர்ணயிக்க முடியாத நிலைக்கு தங்க வர்த்தகர்கள் தள்ளப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

ஜனாதிபதியின் அறிவிப்பின் பிரகாரம், ஒரு பவுண் தங்கம் 85,000 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட வேண்டியுள்ளது.

இந்த நிலையில், செட்டியார் தெரு தங்க வர்த்தகர்கள் ஜனாதிபதியை சந்திப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் அறிய முடிகின்றது.

எவ்வாறாயினும், ஜனாதிபதியின் அறிவிப்பின் பிரகாரம், தங்கத்திற்காக நீக்கப்பட்ட 15 வீத வரியின் சலுகையை விரைவில் நுகர்வோருக்கு வழங்க தாம் நடவடிக்கை எடுப்பதாக செட்டியார் தெரு தங்க வர்த்தகர் ஒருவர் தமிழன் பத்திரிகைக்கு உறுதியளித்திருந்தார்.

### சஹ்ரானை...

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் நேற்று முன்தினம் முன்னிலையாகி சாட்சியம் வழங்கிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் உண்மையான சூத்திரதாரிக்கு, நாட்டை சீர்குலைக்க வேண்டிய தேவை ஏற்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

அவ்வாறு நாட்டை சீர்குலைக்கும் நோக்கத்தை வேறொரு சக்தியே ஏற்படுத்தியுள்ளதாக ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.எஸ். அமைப்பின் பெயரை பயன்படுத்தி நாட்டை சீர்குலைக்கும் எண்ணமே அவர்களிடம் காணப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சஹரான் உள்ளிட்ட குழுவினரை குறித்த சூத்திரதாரிகள் இந்த தாக்குதலை நடத்துவதற்கு பயன்படுத்திக் கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது ஒரு தடவை மாத்திரமே நடத்தப்பட்ட சம்பவம் எனவும், மற்றுமொரு முறை இவ்வாறான சம்பவம் இடம்பெறாது எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இந்த வாக்குமூலத்தை தொடர்ந்து, குறித்த அமைப்பு தொடர்பான தகவல்களை வெளியிடுமாறு ஜனாதிபதி ஆணைக்குழு உறுப்பினர்கள் ரவூப் ஹக்கீமிடம் கோரியுள்ளனர்.

அதற்கு பதிலளித்த ரவூப் ஹக்கீம், ஊடகங்கள் இல்லாத சந்தர்ப்பத்தில், தான் அந்த அமைப்பு தொடர்பிலான தகவல்களை வெளியிடுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

### மட்டக்களப்பில்...

**- செங்கலடி -**

மட்டக்களப்பு மாவட்டத்தில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களினால் முன்னெடுக்கப்பட்டுவருகின்ற நுண் கடன் திட்டங்களை உடனடியாக நிறுத்துமாறு அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா தனியார் நிறுவனங்களுக்கு கண்டிப்பான உத்தரவை பிறப்பித்துள்ளார். தற்போது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள நுண் கடன்களை மீளப்பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மாத்திரம் மாவட்டத்தில் முன்னெடுக்க முடியுமே தவிர புதிய கடன்கள் வழங்கப்படக்கூடாது என்றும் இதனை பிரதேச செயலாளர்கள் கண்காணித்து அறிக்கையிட வேண்டும் எனவும் அவர் உத்தரவிட்டார் மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச சார்பற்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் திட்ட மீளாய்வுக் கூட்டம் மாவட்ட செயலகத்தில் ,அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை (8) மாவட்ட செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது. மாவட்டத்தில் 35 அரச சார்பற்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், தங்களின் செயல்பாட்டு முன்னேற்ற மீளாய்வினை இதன்போது முன்வைத்தனர். மொத்தத்தில் 124 திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அத்திட்டத்தினுள் கல்வி சுகாதார விவசாய வாழ்வாதாரம் கால்நடை வளர்ப்பு மீன்பிடி போன்ற துறைகளை உள்ளடங்கியதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. மாவட்டத்தில் இயங்கிவருகின்ற அரச சார்பற்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் கடந்த காலங்களில் ஏற்பட்ட கொரோனா தொற்றுக்காலத்தில் அரசாங்கத்தின் உதவித்திட்டங்கள் மக்களுக்கு வழங்குவதற்கு முன்னதாக அவர்களாக முன்வந்து மக்களுக்கு உணவுப்பொருட்களை வழங்கியமைக்கு அனைத்து அரச சார்பற்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கும் அரசாங்க அதிபர் நன்றியினை தெரிவித்தார். இக்கூட்டத்திற்கு மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந்த், திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தி, உதவி மாவட்ட செயலாளர் ஏ.நவேஸ்வரன் மற்றும் பிரதேச செயலாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், திணைக்கள தலைவர்கள் கலந்து கொண்டு கருத்துக்களை தெரிவித்தனர்.

### தமிழகத்தில்....

கொண்டே இந்திய பாதுகாப்பு பிரிவினர் இந்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இலங்கையின் பிரபல போதைப்பொருள் வர்த்தகரான அங்கொட லொக்கா அண்மையில் கொலை செய்யப்பட்டுள்ளதாக இந்திய பாதுகாப்பு பிரிவினர் அறிவித்திருந்தனர்.

இதையடுத்து, அங்கொட லொக்கா தொடர்பிலான விசாரணைகள் இந்திய சி.பி.ஐ அதிகாரிகள் வசமாகியிருந்தது.

இவ்வாறான பின்னணியில், கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவில் கடமையாற்றிய நிலையில் போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் தேடப்பட்ட பிரதீப் குமார பண்டாரநாயக்க கடந்த 2ஆம் திகதி தனுஷ்கோடி நோக்கி சட்டவிரோதமாக படகொன்றின் மூலம் சென்றிருந்தார். தனுஷ்கோடியில் கரையிறங்கிய பிரதீப் குமார பண்டாரநாயக்கவை அந்தநாட்டு பாதுகாப்பு பிரிவினர் கைது செய்து, இராமேஸ்வரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதன்படி, மன்னாரிலுள்ள முகவர் ஒருவரின் உதவியுடன் படகொன்றை பெற்று தனுஷ்கோடி பகுதிக்கு வருகைத் தந்ததாக அவர் வாக்குமூலம் வழங்கியுள்ளார். தன்னுடன் படகில் 2 பேர் வருகை தந்ததாகவும், அவர்கள் தனுஷ்கோடியில் தன்னை இறக்கி விட்டு மீண்டும் இலங்கை நோக்கி பயணித்துள்ளதாகவும் பிரதீப் குமார பண்டாரநாயக்க வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

அதேவேளை, இந்தியாவில் சுரேஷ் என்ற நபரை தொடர்பு கொள்ளுமாறு இலங்கையை சேர்ந்த ஆட்கடத்தல் முகவர் தன்னிடம் கூறிய நிலையில், அவரது இலக்கமொன்றையும் தனக்கு வழங்கியிருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், சுரேஷ் என்ற நபருடையது என கூறப்படும் தொலைபேசி இலக்கத்துடன் இந்திய பாதுகாப்பு பிரிவினர் தொடர்புக் கொள்ள முயற்சித்த போதிலும், அந்த தொலைபேசி இலக்கத்தை அடைய முடியவில்லை என அந்த நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், குறித்த தொலைபேசி இலக்கம் ஈரோடு பகுதியில் இறுதியாக இயக்கப்பட்டுள்ளமை தொடர்பிலான தகவல்களை இராமேஸ்வரம் பொலிஸார் தொழில்நுட்ப உதவியுடன் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இந்த நிலையில், அங்கொட லொக்கா தொடர்பில் விசாரணைகளை நடத்திவரும் சி.பி.ஐ அதிகாரிகள், விரைவில் பிரதீப் குமார பண்டாரநாயக்கவிடமும் விசாரணைகளை நடத்த எதிர்பார்த்துள்ளதாக அறிய முடிகின்றது.

எனினும், இலங்கையில் பிரதீப் குமார பண்டாரநாயக்க மீது எந்த பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை அடிப்படையாகக் கொண்டே இந்த விசாரணைகளை முன்னெடுக்க தமக்கு அதிகாரம் காணப்படுவதாக சி.பி.ஐ அதிகாரிகள் கூறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதனால் பிரதீப் குமார பண்டாரநாயக்க மீது இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்கு விபரங்களை இலங்கை பொலிஸாரிடம் கோர இந்திய பாதுகாப்பு பிரிவினர் தீர்மானித்துள்ளனர்.

இந்த நிலையில், பிரதீப் குமார பண்டாரநாயக்கவிடம் கியூ பிரிவு பொலிஸாரா அல்லது சி.பி.ஐ அதிகாரிகளா விசாரணைகளை நடத்துவார்கள் என்பது விரைவில் நீதிமன்றத்தில் ஊடாக தீர்மானிக்கப்படும் என கூறப்படுகின்றது.

எவ்வாறாயினும், தற்போது இந்த சம்பவம் தொடர்பில் கரையோர பாதுகாப்பு பிரிவு பொலிஸாரே விசாரணைகளை நடத்தி வருகின்ற நிலையில், பிரதீப் குமார பண்டாரநாயக்க 13 நாட்களுக்கு சென்னை - புழல் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### தீப்பற்றிய....

செய்வதற்காக கடற்படை கப்பல் மூலம் தீப் பிடித்த கப்பலை சென்றடையவுள்ளனர்.

இவ்வாறு இலங்கை வந்துள்ள குறித்த வெளிநாட்டு நிபுணர்கள் குழுவில் நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த 10 பேரும் ஜேர்மனி நாட்டை சேர்ந்த ஒருவரும் உள்ளடங்குகின்றனர்.

இவர்களில் மீட்பு பணிகளின் விசேட நிபுணர்களும் இடர்களை மதிப்பிடுபவர்களும் சட்ட ஆலோசகர்களும் அடங்குகின்ற அதே வேளை கல்முனைக்கு வருகை தந்த இவர்கள் கடற்படையின் யுத்தக் கப்பல் ஒன்றின் மூலம் தீப்பற்றிய கப்பலை நோக்கிச்சென்றுள்ளதை அவதானிக்க முடிந்தது.

இவ்வாறு வருகை தந்த இக்குழுவினரை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கு.சுகுணன் வழிகாட்டலில் கொரோனா தொற்றுநோய் தடுப்பு தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கையினை சம்பவ இடத்திற்கு வருகை தந்த கல்முனை சுகாதார பிராந்திய சேவைகள் பணிமனையின் தொற்றா நோய் பிரிவின் வைத்திய அதிகாரி நாகூர் ஆரிப் மேற்பார்வை செய்திருந்துஅறிவுறுத்தல்களை வழங்கி சுகாதார ஆலோசனைகளை உரிய தரப்பினருக்கு வழங்கி இருந்தார்.

மேலும் விசேட நிபுணர்களை படகின் மூலம் கொண்டு சென்ற கடற்படையினர் மீண்டும் கரைக்கு திரும்பியவுடன் முகாம் முன்பாக கொரோனா தொற்று நீக்கும் செயற்பாட்டிற்கு உள்ளாக்கப்பட்டு முகாமிற்கு அனுமதித்ததை அவதானிக்க முடிந்தது. அத்துடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை(6) மாலை குறித்த கப்பல் தொடர்பாக ஆய்வு செய்வதற்காக இலங்கைக்கு ஏற்கனவே வெளிநாட்டு நிபுணர்கள் குழுவினர் கல்முனைக்கு வருகை தந்திருந்தனர்.

இவர்களில் பிரித்தானியா மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளை சேர்ந்த விசேட நிபுணர்கள் உள்ளடங்குவதுடன் வருகை தந்த நிபுணர்கள் குழுவில் இரு பெண்களும் உள்ளடங்குகின்றனர்.இதேவேளை கப்பலில் இருந்து எண்ணைக் கசிவு ஏற்பட்டால் அதனைத் தடுக்கும் வகையில் இந்திய கடற்பாதுகாப்புத் திணைக்களத்தின் 20 பொறியியலாளர்கள் குறித்த பகுதிக்கு விஜயம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### தலைவர்....

ஐ.தே.கவின் புதிய தலைவர் 2021 ஜனவரி முதலாம் திகதி பெயரிடப்படுவார்.

தற்போது பிரதித்தலைவராக நியமிக்கப்படுபவர், 2021 ஜனவரி முதலாம் திகதியன்று கட்சியின் தலைமையை ஏற்றுக்கொள்வார் என்று சொல்லப்படுகிறது.

இதேவேளை கட்சித் தலைமைப் பதவியை எதிர்பார்த்து காத்திருக்கும் முன்னாள் எம்.பி.க்களான நவீன் திஸாநாயக்க, ரவி கருணாநாயக்க, ருவன் விஜேவர்தன, அர்ஜுன ரணதுங்க ஆகியோருடன் ரணில் நேற்று ஆலோசனை நடத்தினார்.

அகில விராஜ், வஜிர அபேவர்தன ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டாலும் அவர்கள் நேற்றைய சந்திப்பில் கலந்துகொள்ளவில்லை.

புதிய பிரதித் தலைவர் பதவியை நியமனம் செய்வது குறித்து இதன்போது ஆராயப்பட்டது.

### கல்முனை...

கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், நேற்று கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில், அம்பாறை மாவட்டத்தில் 30 வருடகாலமாக கல்முனை வடக்கு பிரதேசசபை இயங்கி வருகின்றது. ஆனால் இதுவரையில் அந்த பிரதேச சபைக்குரிய கணக்காளரோ, தேவையான அதிகாரிகளோ நியமிக்கப்படாத நிலைமை காணப்பட்டுவருகிறது. நீண்டகாலமாக இவ்வாறானதொரு பிரச்சினையுடன் அந்த பிரதேசசபை இயங்கி வருகிறது. அந்த பிரதேசசபைக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படாதமையினால் இன ரீதியாக முறுகல் நிலை அங்கு இருந்து கொண்டே இருக்கிறது. ஆகவே இந்த பிரதேசசபைக்கு அதிகாரத்தை வழங்கி, தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மூவினமக்கள் சகோதரத்துவத்துடன் வாழும் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்கள் மிக மோசமான சூழ்நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர். அதனடிப்படையில் அம்பாறை மாவட்டத்தில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் இன்னும் முழுமைபெறாத சூழ்நிலையே காணப்படுகிறது. அதேபொன்று இதுவரையில் மீள்குடியேற்றப்பட்டவர்களின் வாழ்வாதார மற்றும் அடிப்படை பிரச்சினைகள் தொடர்ந்துகொண்டேதான் இருக்கின்றன. இவ்வாறானதொரு சூழ்நிலையில், தமிழ் மக்கள் அதிகம் வாழ்கின்ற பொத்துவில் பிரதேசத்தில் 11 வருடங்களாக மீள்குடியேற்ற நடவடிக்கைகள் இடம்பெறாத ஒரு கிராமம் இருந்த வண்ணமே இருக்கிறது. அந்த மக்களை மீள்குடியேற்றம் செய்து அவர்களுக்கான வாழ்வாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது நாடாளுமன்றத்தின் கடமையாகும்.

அதுமாத்திரமல்ல, பொத்துவில் பிரதேசத்தில் குறிப்பாக தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் குடிப்பதற்கு சுகாதாரமாக குடிநீர்வசதி இல்லாத பிரச்சினை இருந்து கொண்டேதான் இருக்கிறது. இதுதொடர்பிலும் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். அதேபோன்று, திருக்கோவில் பிரதேசத்தை எடுத்துக்கொண்டால் அந்த பிரதேசத்தில் அநேகமாக தமிழ் மக்களே வாழ்ந்து வருகின்றனர். இந்த பிரதேசம் யுத்தக் காலத்தில் போர் இடம்பெற்ற பிரதேசமாகும். அந்த பிரதேச மக்கள் அவர்களது உறவினர்களின் வீடுகளில் தங்கியிருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதன்பின்னர், 2012 ஆம் ஆண்டு அந்த பிரதேசங்களில் மீள்குடியேற்றம் செய்வதற்கான திட்டம் கொண்டுவரப்பட்டிருந்தாலும், அவர்களுக்கான முழுமையான மீளகுடியேற்றங்கள் இடம்பெறவில்லை.

இவ்வாறானதொரு சூழ்நிலையில், தற்போது அந்த பிரதேச செயலாளர் பிரிவில் இல்மனைட் என்று குறிப்பிடப்படும் மண்அகழ் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான முன்னேற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. 2 வருடங்களுக்கு முன்னரும் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டபோது, அந்த பிரதேச மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து அந்த அகழ்வு நடவடிக்கைகளை நிறுத்தியிருந்தார்கள். மீண்டும், இல்மனைட் அகழ்வு நடவடிக்கையை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதனூடாக மக்கள் மேலும் பாதிப்புக்குள்ளாகவேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். வாழ்வாதாரம் மாத்திரமன்றி பிரதேச மக்கள் நோய்வாய்ப்புக்குட்பட கூடிய சூழ்நிலையும் தோற்றம்பெறும்.

இதேவேளை, ஆலையடிவேம்பு பிரதேசத்தில் பல்வேறு கிராமங்கள் இணைந்து காணப்படுகின்றன. அந்த பிரதேசத்தை அண்மித்த கிராமங்களுக்கு குடிநீர்வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டிருந்தபோதிலும், ஆலையடிவேம்பு குடிநீர்வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்படவில்லை என்பது சுட்டிக்காட்டவேண்டிய விடயமாகும். மேலும் சம்மாந்துறை பிரதேசசபை பிரிவில் இருக்கும் மல்லிகைத்தீவு என்னும் கிராமத்தை சூழ விவசாய நிலங்கள் காணப்படுகின்றன. அந்த விவசாய நிலங்களில் கிருமிநாசினி பயன்படுத்துவதால், அந்த மக்கள் நீலத்தடி நீரை பருகும்போது நோய்களால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். நாவிதன்வெளி பிரதேசத்தில் பெரிய அரிசி ஆலை இருந்தது. ஆனால் தற்போது அந்த அரிசி ஆலை அழிக்கப்பட்டுள்ளது. அதனை மீண்டும் செப்பனிட வேண்டும் - என்றார்.

# இருபதாவது திருத்தச் சட்டம் தமிழ் மக்களுக்கு நன்மை தராது

## நாடாளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் தெரிவிப்பு




(வவுனியா)

இருபதாவது திருத்தச் சட்டம் தமிழ்மக்களுக்கு நன்மை தராது, ஆபத்தானது. இதனை எதிர்க்கவேண்டும் - என நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர், 19ஆவது திருத்தச் சட்டத்தில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு நாடாளுமன்றத்திற்கு அதிகளவு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. ஆகவே, திருத்தச் சட்டத்தை முழுமையாக நீக்கி இருபதாவது திருத்தச் சட்டத்தைக் கொண்டுவருவதன் மூலம் மீண்டும் ஜனாதிபதிக்கு அதிகாரத்தைக் குவிக்கின்ற ஒரு முயற்சி நடைபெறுகின்றது.

மகிந்த ராஜபக்ஷ மற்றும் சகோதரர்கள் இந்தப் போர் வெற்றியைப் பயன்படுத்தி - தமக்கு கிடைத்த ஆதரவைப் பயன்படுத்தி தாம் நீண்டகாலத்துக்கு ஆட்சிசெய்வதற்கு இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டுவருகிறார்கள். இந்தச் செயற்பாடு ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தலான செயற்பாடு. இதனால் இத்திருத்தச் சட்டத்தை முழுமையாக எதிர்க்கவேண்டிய நிலை இருக்கின்றது.

நாடாளுமன்றத்துக்கு அதிகாரம் இருந்தாலும் சரி, ஜனாதிபதிக்கு அதிகாரம் இருந்தாலும் சரி எல்லோரும் தமிழர்களுக்கு எதிரான விடயத்தையே கடைப்பிடித்து வருகின்றார்கள். இதற்கு கடந்த 70 வருட காலம் சான்றாக இருக்கின்றது. ஆகவே, இந்த இருபதாவது திருத்தச் சட்டம் தமிழ்மக்களுக்கு நன்மை தராது.

ஆனால், பொதுவான ஜனநாயகம் எனும்போது இருபதாவது திருத்தச் சட்டம் ஆபத்தானது. ஆகவே, இதனை எதிர்க்கவேண்டும் – என்றார்.




# ‘கொரோனா’ காலத்தில் கடன் செலுத்தாதவர்களை ‘கிறிப்’ முறைக்குள் உள்வாங்காதீர்கள்

## நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் மத்திய வங்கி ஆளுநரிடம் கோரிக்கை

(வவுனியா)

நிதி நிறுவனங்களில் கடன் பெற்று அதனை கொரோனா காலத்தில் செலுத்த முடியாது போனவர்களை வங்கி செயற்பாடுகளுக்கு தடை விதிக்கும் கிறிப் திட்டத்திற்குள் உள் வாங்காதீர்கள் - என மத்திய வங்கி ஆளுநரிடம் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் கோரிக்கை விடுத்தார்.

மத்திய வங்கியின் ஆளுநருடன் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில்போதே குறித்த கோரிக்கையை அவர் விடுத்துள்ளார்.

இக்கலந்துரையாடல் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் மத்திய வங்கியின் ஆளுநருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. குறிப்பாக, கொரோனா காலத்தில் பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் தமது தொழில்துறையை மீளக் கட்டியெழுப்ப வசதியாக அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனங்களினூடாக 25 மில்லியன் வரையில் 4 வீத வட்டிக்கு கடன் பெறும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

எனவே, வடமாகாணத்தைச் சேர்ந்த வர்த்தகர்கள் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி இவ்வாறு கிடைக்கப்பெற்றுள்ள வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

அத்துடன், நுண் நிதி நிறுவனங்களில் கடன்பெற்றவர்களின் நிலைமைகள் தொடர்பாகவும் மத்திய வங்கி ஆளுநரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

அவ்வாறு கடன்பெற்றவர்கள் மீது நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் சமூகத்துக்கு ஒவ்வாத நடைமுறைகள் தொடர்பில் முக்கியமாக சுட்டிக்காட்டப்பட்டது என்றார். இச்சந்திப்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் விசேட பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மூன்று சக்கர வண்டியை மோதியது தனியார் பஸ்

## அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினார் வயோதிபர்





வவுனியாவில் பழைய பஸ் நிலையத்திற்கு முன்பாக மூன்று சக்கர வண்டியில் பயணித்த முள்ளந்தண்டு பாதிக்கப்பட்ட வயோதிபர் வீதியைக் கடக்க முற்பட்டபோது தனியார் பஸ் மோதியதில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், வவுனியா, ஈச்சங்குளம் கருவேப்பங்குளம் பகுதியைச் சேர்ந்த இராசையா செல்வராசா (வயது - 68) வைத்தியசாலைக்கு சென்று நாய்க்கடிக்கு ஊசி போட்டுவிட்டு, இரண்டாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள போன் திருத்தம் செய்யும் கடைக்கு கைத்தொலைபேசி திருத்தம் செய்வதற்காக சென்றுவிட்டு, வீடு திரும்பும்போது பழைய பஸ் நிலையத்திற்கு முன்பாக பிரதான கண்டி வீதியைக் கடக்க முற்பட்டுள்ளார். இதன்போது திடீரென்று பயணித்த வவுனியா – முல்லைத்தீவு தனியார் பஸ், மூன்று சக்கர வண்டியில் பயணித்த குறித்த நபர் மீது மோதியது.

இதன்போது பஸ்ஸின் கீழ்ப்பகுதியில் சிக்கிக்கொண்ட நபர் கை மற்றும் காலில் சிறுகாயமடைந்து அதிர்ஷ்டவசமாக பொதுமக்களால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அமைதிக்கப்பட்டார்.

இவர் கடந்த இறுதி யுத்தத்தில் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற எறிகணை வீச்சில் காயடைந்து இடுப்புக்குக் கீழ் செயற்பாடுகளின்றி மூன்று சக்கர வண்டியின் துணையுடன் தனது அன்றாட செயற்பாடுகளை மேற்கொண்டுவந்தவராலார்.

# மன்னாரில் சிக்கியது மஞ்சள்!



மன்னார் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் மாலை மன்னார் சாந்திபுரம் பிரதான வீதியில் வைத்து ஒரு தொகுதி மஞ்சள் கட்டிகளுடன் மன்னார் பகுதியைச் சேர்ந்த ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பந்துல வீரசிங்கவின் பணிப்புரைக்கமைவாக மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கிருஷாந்தன் தலைமையிலான விசேட பொலிஸ் குழுவினர் குறித்த மஞ்சள் கட்டிகளை மீட்டுள்ளனர்.

இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக கொண்டுவரப்பட்டு நீர்கொழும்பு பிரதேசத்திற்கு வாகனமொன்றில் கடத்திச்செல்ல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தபோது மன்னார் சாந்திபுரம் பகுதியில் வைத்து சந்தேகத்துக்கிடமான குறித்த வாகனத்தை சோதனையிட்ட பொலிஸார், உப்பு பக்கட்டுகளுக்கு மத்தியில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி மஞ்சள் கட்டி மூடைகளைக் கைப்பற்றினர்.

கைப்பற்றப்பட்ட மஞ்சள் கட்டிகள் 1,379 கிலோ 960 கிராம் என மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், மன்னார் பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய சந்தேகநபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வீட்டுத்திட்ட பயனாளிகளுடன் நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தான் கலந்துரையாடல்




(வவுனியா)

வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டு இடைநடுவே நிறுத்தப்பட்ட பயனாளிகளையும், இதுவரை வீட்டுத்திட்டம் வழங்கப்படாத பயனாளிகளையும் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் சந்தித்து கலந்துரையாடினார்.

வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டுள்ள பயனாளிகளுக்கு அதனை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுப்பதாகவும் இதுவரை வீட்டுத்திட்டம் வழங்கப்படாதவர்களுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுப்பதாகவும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் பயனாளிகளுக்கு உறுதியளித்தார்.

இக்கலந்துரையாடலில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் வவுனியா மாவட்ட பொறுப்பதிகாரி மற்றும் வீடுகளற்ற பயனாளிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# யாழ். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 3 பிள்ளைகளின் தாய் உயிரிழப்பு!

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற விபத்தில், படுகாயமடைந்து சிகிச்சைபெற்றுவந்த 3 பிள்ளைகளின் தாய் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார். தெல்லிப்பழை பகுதியைச் சேர்ந்த பிரதீபன் சதீனா (வயது 38) என்ற மூன்று பிள்ளைகளின் தாயே இவ்வாறு நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.



இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, தெல்லிப்பழை பகுதியில் வசித்துவரும் குறித்த பெண், யாழ்ப்பாணத்திலிருந்து தனது வீடு நோக்கி கடந்த 21ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளார். இதன்போது திடீரென பிரேக் பிடித்தபோது, மோட்டார் சைக்கிளிலிருந்து கீழே வீழ்ந்துள்ளார். அத்துடன் அவர் அணிந்திருந்த தலைக்கவசம் கழன்று வீழ்ந்துள்ளது.

இதனால் தலையில் படுகாயமடைந்து மயக்கமடைந்த அவர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்றுவந்த நிலையில் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்த மரணம் தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 32ஆவது இளைஞர் விளையாட்டு விழாவில்

# ஒட்டுசுட்டான் பிரதேச கரப்பந்தாட்ட போட்டியில் சம்பியனானது சென் ஜோன்ஸ் – பாரதி அணிகள்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் வருடந்தோறும் நடத்துகின்ற இளைஞர் விளையாட்டு விழாவின் 32ஆவது இளைஞர் விளையாட்டு விழா பிரதேச ரீதியான விளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்றுவருகின்றன

அதன்படி ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 32ஆவது இளைஞர் விளையாட்டு விழாவின் குழு போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் கரப்பந்தாட்டப் போட்டி நேற்றைய தினம் ஒட்டுசுட்டான் கூழாமுறிப்பு சென். ஜோன்ஸ் இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் கூழாமுறிப்புப் பகுதியில் இடம்பெற்றது.

பெண்களுக்கான கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் மோதிய முத்துஐயன்கட்டு இளைஞர் கழக அணியை சென். ஜோன்ஸ் இளைஞர் கழக அணி வீழ்த்தி வெற்றிவாகை சூடியது.

இதில் கூழாமுறிப்பு சென். ஜோன்ஸ் அணியினர் முதலாம் இடத்தையும் முத்துஐயன்கட்டு



பாரதி இளைஞர் கழக அணியினர் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

அதேபோன்று ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் கரிப்பட்டமுறிப்பு புதியநகர் ஈகிள்ஸ் இளைஞர் கழக அணியை எதிர்த்துப்



போட்டியிட்டு முத்துஐயன்கட்டு பாரதி இளைஞர் கழக அணியினர் வெற்றிவாகை சூடினர்.

இதில் முத்துஐயன்கட்டு பாரதி இளைஞர் கழக அணியினர் முதலாம் இடத்தையும் கரிப்பட்ட முறிப்பு புதிய நகர் ஈகிள்ஸ் இளைஞர் கழக அணியினர் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு போட்டியில் பங்குபற்றிய வீரர்களுக்கு கைலாகு கொடுத்து அவர்களை உற்சாகப்படுத்தி போட்டி நிகழ்வுகளில் பங்குபற்றி அங்கு உரை நிகழ்த்தியிருந்தார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900 / 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilannews@yahoo.com
2020, செப்டெம்பர் 09ஆம் திகதி, புதன்கிழமை

# கவனிக்கப்படவேண்டிய தோட்டத் தொழிலாளர்கள்!

பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ள தேயிலைக் கைத்தொழிலை மேம்படுத்தல் பல்வேறு வழிமுறைகளின் மூலம் நடைபெறவேண்டுமென்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்திருப்பது குறித்து கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

கம்பனித் தோட்டங்களை மறுசீரமைத்தல், தேயிலைத் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச்செய்கை, தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல் மற்றும் தேயிலை ஏற்றுமதி மேம்பாடு இராஜாங்க அமைச்சின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் தேயிலை பயிர்ச்செய்கையை மேம்படுத்துவது குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

உலக சந்தையில் இலங்கை தேயிலை (Ceylon Tea)க்கு காணப்பட்டுவந்த உயர் கேள்வி, கொரோனா தாக்கத்தால் பின்னடைவை சந்திக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அதனால் பல தேயிலைத் தோட்டங்கள் நட்டத்தில் செல்லும் நிலைமை உருவாகியிருக்கிறது. இதனால் நட்டத்தில் இயங்குகின்ற பெருந்தோட்டங்களை கண்காணித்து தேயிலை ஏற்றுமதி மற்றும் வருமானத்தை உயர்த்துவதற்கு நீண்ட, மத்திய மற்றும் குறுகிய கால திட்டங்களை நடைமுறைப்படுத்தவேண்டிய உடனடித் தேவை ஏற்பட்டிருக்கிறது.

இலங்கையில் கிட்டதட்ட நான்கு இலட்சத்து இருபத் தோராயிரம் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் இருக்கின்றனர். பிரதானமான 20 பெருந்தோட்ட நிறுவனங்கள் இருந்தாலும் அவற்றில் 10 நிறுவனங்கள் செயலிழந்துள்ளன. கொவிட் நோய்த் தொற்று, ஊரடங்கு சட்ட அமுல் போன்றவற்றால் வந்த விளைவுகளில் இந்தத் தரப்பினருக்கும் பாதிப்பு ஏற்பட்டது. இதனால் இனிவரும் காலங்களில் தேயிலைச் செடிகளில் விளைச்சலை பெறும்வரை பயிர்ச்செய்கையாளர்களுக்கு சுயதொழில் அல்லது வேறு ஏதேனும் தொழில்களில் ஈடுபடுவதற்கு சலுகைகளை அரசு வழங்கவேண்டியது அவசியமாகும். தேயிலையை மட்டும் நம்பியிராது கோப்பி போன்ற பயிர்ச்செய்கைகளை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டியது அவசியமாகும்.

தேயிலை பற்றிய புதிய ஆராய்ச்சிகளின் மூலம் பயனடையாமை அந்தக் கைத்தொழிலின் வீழ்ச்சிக்கு காரணமாக இருக்கின்றது என்பதும், ஆராய்ச்சிக்கு முக்கியத்துவமளித்து புதிய சந்தை வாய்ப்புகளை கண்டறிவதன் அவசியம் பற்றியும் ஜனாதிபதி தலைமையிலான இந்தக் கூட்டத்தில் வலியுறுத்தப் பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

நட்டம் அடைவதற்கும் செயலிழப்பதற்குமான காரணங்களை குறுகிய காலத்தில் இனங்கண்டு நிரந்தர தீர்வுகளை தருமாறு ஜனாதிபதி இங்கு ஆலோசனை வழங்கியுள்ள அதேசமயம், நட்டத்தில் இயங்கும் பெருந்தோட்ட நிறுவனங்களை ஒழுங்குபடுத்தும் செயற்றிட்டமாக சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு கையளித்து செயற்படுத்துவதற்கும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருப்பது உசிதமான நடவடிக்கையே.

ஏனெனில், காலம் காலமாக தோட்டத் தொழிலாளர் களின் சம்பள அதிகரிப்பென்ற பேச்சு வரும்போது, கம்பனி நட்டத்தில் செல்வதாக பெருந்தோட்டக் கம்பனிகள் சொல்வது வாடிக்கை. நட்டமடைந்தால் அதனை இலாப மீட்டக்கூடிய தரப்புகளுக்கு கையளிக்கலாமென்ற ஜனாதிபதியின் தீர்மானம் காலத்திற்கேற்றது.

பெருந்தோட்டப் பகுதிகளின் வீதிகள், வைத்தியசாலை கள், பாடசாலைகள் மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட உட்கட்ட மைப்பு வசதிகள் அரச பங்களிப்புடன் மேம்பாடு கண்டி ருக்கும்போது பெருந்தோட்ட நிறுவனங்கள் நட்டமடை வது எப்படியென ஆராய்வது உசிதமென பொருளாதார புத்தெழுச்சி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ இங்கு கேள்வியெழுப்பியிருப் பதும் அர்த்தபுஷ்டியானது.

இலங்கையின் தேநீர் உலகளாகிய ரீதியில் புகழடைவ தற்கு மாத்திரமன்றி, அதன்மூலம் அந்நிய செலாவணி வருவதற்கும் நாட்டின் பொருளாதாரம் ஓரளவாவது நிமிர்ந்து நிற்பதற்கும் தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பே பிரதான காரணமாகும். ஆனால், அவர்களின் சம்பள அதிகரிப்பு ஒருபுறமிருக்க, அவர்களின் வாழ்க்கைத் தரத்தைக்கூட மேம்படுத்துவதற்கு அவர்களின் உழைப் பைச் சுரண்டும் பெருந்தோட்டக் கம்பனிகள் எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்பதுதான் துயரம்.

அவ்வாறான பின்னணியில், தேயிலை பயிர்ச்செய் கையை மேம்படுத்த கரிசனை செலுத்தும் அரசு அதே போல தோட்டத் தொழிலாளர் சம்பளப் பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு செயற்றிட்டமொன்றை வகுக்கவும், அவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தவும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்தல் அவசியம். அதற்கான காலம் இப்போது கனிந்திருக்கிறது.

கூட்டு ஒப்பந்தம் என்ற பொறிமுறைக்குள் தொழிலா ளர்களின் சம்பளப் பிரச்சினையை வைத்துக்கொண்டு பெருந்தோட்டத் தொழிற்சங்கங்களும், கம்பனிகளும் செய்யும் சித்துவிளையாட்டுகளையும் அரசு முடிவுக்குக் கொண்டுவரவேண்டும். ஒட்டுமொத்தத்தில் தேயிலை பயிர்ச்செய்கையுடன் அதன் தொழிலாளர்களையும் அவர்தம் வாழ்க்கையையும் கட்டியெழுப்ப ஆட்சியாளர்கள் ஆக்கபூர்வ நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.




# சத்துருக்கொண்டான் படுகொலை

## ஒரே இரவில் 185 பொதுமக்கள் வெட்டிக்கொலை செய்யப்பட்ட அவலம்

- இரா.துரைரத்தினம் -

மட்டக்களப்பு, சத்துருக்கொண்டான் கிராமத்தில் 1990ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9ஆம் திகதி நடத்தப்பட்ட இந்தப் படுகொலை இலங்கையில் நடந்த கூட்டுப்படுகொலைகளில் மிகக் கொடூரமான சம்பவமாகும்.

சத்துருக்கொண்டான் போய்ஸ்ரவுண் இராணுவ முகாமுக்கு கொண்டுசெல்லப்பட்டு 185 பொதுமக்கள் வெட்டிப் படுகொலைசெய்யப்பட்டனர்.

சத்துருக்கொண்டான் போய்ஸ்ரவுண் இராணுவ முகாமில் சத்துருக்கொண்டான், பிள்ளையாரடி, பனிச்சையடி கொக்குவில் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 185பேர் படுகொலை செய்யப்பட்டனர். இதில் ஒரு வயதிற்குட்பட்ட 5 குழந்தைகள், பத்துவயதிற்குட்பட்ட சிறுவர்கள் 42 பேர், கர்ப்பிணி பெண்கள் 9 பேர், 68 வயதிற்கு மேற்பட்ட 28 பேர் என 185 பேர் ஒரே நாளில் வெட்டிக் கொலைசெய்யப்பட்டனர்.

இதில் சத்துருக்கொண்டான் கிராமத்தைச் சேர்ந்த 38 பேரும், பனிச்சையடியைச் சேர்ந்த 37 பேரும், பிள்யைாரடியைச் சேர்ந்த 62 பேரும், கொக்குவிலைச் சேர்ந்த 47 பேரும் இச்சம்பவத்தில் படுகொலைசெய்யப்பட்டனர்.

மனித உரிமை அமைப்புகள், மட்டக்களப்பு சமாதான குழு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றில் இச்சம்பவம் பற்றி நேரில் கண்டவர்கள் சாட்சியமளித்திருந்தனர். 1994ஆம் ஆண்டு ஆட்சிக்குவந்த ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்காவினால் வடக்கு, கிழக்கில் காணாமல் போனவர்கள் பற்றி விசாரிப்பதற்காக ஓய்வுபெற்ற நீதியரசர் கி.பாலகிட்ணர் தலைமையில் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

இந்த ஜனாதிபதி ஆணைக்குழு 1995.04.24 தொடக்கம் 1995.05.02ஆம் திகதி வரை மட்டக்களப்பில் விசாரணகளை நடத்தியது.

இந்த ஆணைக்குழுவில் இச்சம்பவத்தை நேரில் கண்ட சாட்சிகளாக கந்தசாமி கிருஷ்ணகுமார், ஆசிரியர் கந்தையா சிவக்கொழுந்து, மின்சார சபை அத்தியட்சகராக பணியாற்றிய அந்தோனிப்பிள்ளை பிலிப் கிறிஸ்ரியன் ஆகியோரும் மட்டக்களப்பு பிரஜைகள் குழுத் தலைவர் அருணகிரிநாதன் ஆகியோரும் சாட்சியமளித்தனர். பாதிக்கப்பட்ட 72 பொதுமக்கள் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முறைப்பாட்டை பதிவுசெய்தனர்.

145 பக்கங்களைக்கொண்ட இந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை 1997ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

ஜனாதிபதி பிரேமதாஸவினால் உருவாக்கப்பட்ட 'கழுக்கொட்டி' எனப்படும் கொலைப்படையினர் 1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் போர் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டனர். இவர்களை மட்டக்களப்பு மக்கள் 'வெட்டுப்பாட்டி' என அழைத்தனர். இவர்கள் கூட்டம் கூட்டமாக மக்களை கொண்டுசென்று வெட்டி கொலைசெய்து வந்தனர். இந்த அச்சத்தினால் தங்கள் கிராமங்களைவிட்டு அகதி முகாம்களிலும் தங்கியிருந்தனர். பலர் மாவட்டத்தைவிட்டு வெளியேறியிருந்தனர்.

கிழக்குப் பல்கலைக்கழக அகதி முகாமில் செப்டெம்பர் 5ஆம் திகதி 158 பேர் கடத்திச் செல்லப்பட்டு படுகொலைசெய்யப்பட்டதையடுத்து அகதி முகாமிலும் பாதுகாப்பு இல்லை எனக் கருதி சத்துருக்கொண்டான் பிள்ளையாரடி மக்கள் தமது கிராமங்களுக்குத் திரும்பியிருந்தனர்.

களுக்கொட்டி என அழைக்கப்படும் படைப்பிரிவு கப்டன் திஸ்ஸ வர்ணகுலசூரிய தலைமையில் சத்துருக்கொண்டான் போய்ஸ்ரவுண் முகாமுக்கு ஓகஸ்ட் 17ஆம் திகதி வந்திருந்தது.

அவர்கள் வந்த அன்றைய தினமே கொக்குவில் கிராமத்தில் பொதுமக்கள் 24பேரை பிடித்து சித்திரவதைசெய்து அவர்களில் மரியநேசம், சுப்பிரமணியன், தவராசா, குமாரசாமி ஆகிய நால்வரையும் உயிருடன் ரயர் போட்டு எரித்தனர். ஏனைய 20பேரையும் முகாமுக்கு கொண்டுசென்றனர். அவர்களுக்கு என்ன நடந்தது என இதுவரை தெரியாது.

சத்துருக்கொண்டான் படுகொலை சம்பவம் நடப்பதற்கு முதல்நாள் 8ஆம் திகதி சத்துருக்கொண்டான் தென்னம் தோட்டத்திற்குள் சென்ற படையினர் தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்த கணபதிப்பிள்ளை மற்றும் இளையான் ஆகிய இருவரையும் அடித்து சித்திரவதை செய்த பின் ஓலை மட்டையை போட்டு உயிருடன் எரித்துக் கொன்றனர்.

இச்சம்பவங்களால் சத்துருக்கொண்டான் மற்றும் பிள்ளையாரடி உட்பட அப்பகுதி கிராமங்களிலுள்ள மக்கள் பெரும் அச்சமும் பதற்றமும் அடைந்திருந்தனர். இதனால் பலர் அக்கிராமங்களை விட்டு வெளியேறியிருந்தனர். பல குடும்பங்கள் ஒன்றாக சேர்ந்திருந்தன.

1990ஆம் ஆண்டு செப்டெம்பர் 9ஆம் திகதி மாலை 5 மணியளவில் கப்டன் வர்ணகுலசூரிய தலைமையில் இராணுவத்தினரும் முஸ்லிம் ஊர்காவல் படையினரும், புளொட் மோகன் தலைமையில் புளொட் ஆயுதக்குழுவும் ஆயுதங்களுடன் சத்துருக்கொண்டான், பிள்ளையாரடி, பனிச்சையடி, கொக்குவில் ஆகிய கிராமங்களை சுற்றிவளைத்தனர்.

இராணுவ முகாமில் கூட்டமொன்று இருக்கிறது, அனைவரும் முகாமுக்கு வாருங்கள் என இராணுவத்தினர் உத்தரவிட்டனர். நடக்க முடியாத வயோதிபர்களை கூட அவர்கள் வீட்டில் இருக்க அனுமதிக்கவில்லை.

ஒருசிலர் இராணுவத்தினரின் கண்களில் படாது காடுகளில் சென்று ஒளிந்துகொண்டனர். அவர்களில் ஆசிரியர் சிவக்கொழுந்துவும் ஒருவர். அவர் பற்றைகாட்டிற்குள் ஒளிந்திருந்து சம்பவத்தை பார்த்துக்கொண்டிருந்ததாக ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளிக்கும்போது தெரிவித்தார்.

நான்கு கிராமங்களையும் சேர்ந்த பொதுமக்கள் 185 பேரையும் கொண்டுசென்று இராணுவ முகாமுக்கு பக்கத்திலிருந்த அரிசி ஆலை கட்டிடத்திற்குள் அடைத்து வைத்தனர்.

பின்னர் வாள், கத்திகளுடன் வந்த இராணுவத்தினரும் முஸ்லிம் ஊர்காவல் படையினரும் மூன்று மூன்று




பேராக கொண்டுசென்றனர். இவர்களில் முதலில் 27 வயதுடைய குமார், 33 வயதுடைய ஜீவானந்தம், 22 வயதுடைய கிருஷ்ணகுமார் ஆகியோரை வெட்டி பாரிய கிடங்கொன்றில் போட்டனர். இதில் கிருஷ்ணகுமார் என்பவரே காயங்களுடன் தப்பியிருந்தார்.

பின்னர் ஆண்களை மூன்று மூன்று பேராக அழைத்து வந்து இரும்புக்கம்பியால் அடித்துக் கொன்றனர். கால்களையும், தலைகளையும் வெட்டி அங்கே ஏற்கனவே தோண்டப்பட்டிருந்த பெரிய குழியில் போட்டனர்.

இதன் பின்னர் பெண்களை வெளியில் கொண்டுவந்து பாலியல் பலாத்காரம் செய்து வெட்டிக்கொன்றனர்.

25 வயதுடைய ஜீவமலர் என்ற பெண்ணிற்கு மூன்று மாதத்திற்கு முதல்தான் பெண்குழந்தை பிறந்திருந்தது. பிரியா என்ற மூன்று மாதக் குழந்தையை பறித்தெடுத்து இரண்டு துண்டுகளாக வெட்டி தாயின் கண்முன் குழியில் வீசினர். ஜீவமலரை இழுத்துச்சென்று பாலியல் பலாத்காரம் செய்த பின்னர் வெட்டிக் கொலைசெய்தனர்.

பின் சிறுவர்களையும், குழந்தைகளையும் கொண்டுவந்து சாய்ந்து கிடந்த முந்திரிகை மரத்தில் ஒவ்வொருவராக படுக்கவைத்து இரண்டு துண்டுகளாக வெட்டி குழியில் போட்டனர்.

சிறிதுநேரத்தின் பின் இளம்பெண்களை இழுத்து வந்து பாலியல் பலாத்காரம் செய்தனர். அந்தநேரம் நன்றாக இருளாகிவிட்டது. அந்நேரத்திலேயே சடலங்களுடன் உயிருடன் கிடந்த கிருஷ்ணகுமார் தவண்டு வெளியே வந்து முந்திரிகை மரத்து பற்றைக்குள் ஒளித்துகொண்டார்.

பாலியல் பலாத்காரம் செய்த பின்னர் இளம் பெண்களை வெட்டிக் கொலைசெய்து குழியில் வீசினர். இவர்களில் பலர் அரைகுறை உயிருடன் காணப்பட்டனர்.

இவர்கள் மீது டயர்களை போட்டு பெற்றோல் ஊற்றி தீ வைத்தனர். நள்ளிரவு ஒரு மணிக்குப் பின்னர் சத்துருக்கொண்டான் இராணுவ முகாமுக்கு பின்பக்கத்தில் பெரும் தீச்சுவாலை தெரிந்ததாக ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளித்த ஆசிரியர் சிவக்கொழுந்து தெரிவித்திருந்தார்.

காயங்களுடன் தப்பிவந்த கிருஷ்ணகுமாரை காடுகளில் ஒளித்திருந்த பொதுமக்கள் வைத்தியசாலையில் அனுமதித்தனர். காயங்களுடன் ஒருவர் தப்பிச் சென்றுவிட்டார் என அறிந்த இராணுவத்தினர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அவரை தேடினர். ஆனால், கிருஷ்ணகுமாரை வைத்தியசாலையிலிருந்து மீட்ட பிரஜைகள் குழுவினர் மட்டக்களப்பு ஆயர் இல்லத்தில் ஒப்படைத்தனர். கிருஷ்ணகுமாருக்கு ஆயர் இல்லத்தில் வைத்தே சிகிச்சையளிக்கப்பட்டது. அவரிடம் வாக்குமூலம் ஒன்றையும் மட்டக்களப்பு பிரஜைகள் குழுவினர் பதிவு செய்துகொண்டனர். இந்த ஒலிப்பதிவும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் சான்றாக சமர்ப்பிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் நேரில் கண்ட சாட்சியான கந்தசாமி கிருஷ்ணகுமார் ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளித்தார்.

ஓய்வுபெற்ற நீதியரசர் பாலகிட்ணர் தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு சத்துக்கொண்டான் படுகொலையில் குற்றஞ்சாட்டப்பட்ட கப்டன் வர்ணகுலசூரியாவை அழைத்து விசாரித்தது. ஜனாதிபதி ஆணைக்குழு முன் அளித்த வாக்குமூலத்தில் சம்பவ தினம் யாரையும் இராணுவ முகாமுக்கு கொண்டுவரவும் இல்லை, அப்படி ஒரு சம்பவம் எதுவும் நடக்கவும் இல்லை என கப்டன் வர்ணகுலசூரிய தெரிவித்திருந்தார். அக்கிராமங்களை சுற்றிவளைக்கவும் இல்லை என அவர் தெரிவித்திருந்தார்.

ஆனாலும், சாட்சிகளின் வாக்குமூலங்களின்படி கப்டன் வர்ணகுலசூரிய, கப்டன் ஹேரத் விஜயநாயக்க, கேர்ணல் பெசி பெர்னாண்டோ ஆகியோரும் அவர்களுடன் சேர்ந்தியங்கிய முஸ்லிம் ஊர்காவல் படையினரும் புளொட் கொலைப்படையினருமே இக்கொலைகளை புரிந்தனர் என நீதியரசர் பாலகிட்ணர் தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு தனது அறிக்கையில் தெரிவித்திருந்தது.

ஆணைக்குழு தனது அறிக்கையில் படுகொலை நிகழ்ந்ததற்கான வலுவான சாட்சியங்கள் இருப்பதாகவும் குற்றவாளிகளுக்கெதிரான கடும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் பரிந்துரை செய்திருந்தது.

ஆனால், அப்போது ஜனாதிபதியாக இருந்த சந்திரிக்கா பண்டாரநாயக்க இந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை கவனத்தில் எடுக்கவில்லை. அந்த அறிக்கையை கிடப்பில் போட்டுவிட்டார்.

ஓர் இனக்குழுமத்தைச் சார்ந்தவர்கள் என்ற காரணத்திற்காக அவர்கள் படுகொலைசெய்யப்பட்டால் அது இனப்படுகொலையாகும். சத்துருக்கொண்டான் உட்பட கிழக்கிலுள்ள தமிழ்க் கிராமங்களில் தமிழர் என்ற காரணத்திற்காகவே நூற்றுக்கணக்கானவர்கள் ஒரேநாளில் படுகொலைசெய்யப்பட்டனர்.

போருடன் எந்தவகையிலும் சம்பந்தப்படாத குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் என அனைவரும் வெட்டி படுகொலைசெய்யப்பட்டனர். பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு படுகொலைசெய்யப்பட்டனர்.

கிழக்கில் நடந்த மிகப்பெரிய படுகொலைகளில் சத்துருக்கொண்டான் படுகொலையும் ஒன்றாகும். இந்தப் படுகொலைச் சம்பவத்தை நேரில் கண்ட வலுவான சாட்சியங்களும் உள்ளன. ஆனால், 30 வருடங்கள் கடந்துவிட்டபோதிலும் தமிழ் அரசியல் தலைமைகள் யாரும் இப்படுகொலை தொடர்பாக சர்வதேச விசாரணையோ உள்நாட்டு விசாரணையோ நடத்தப்படவேண்டும் எனக் கோரவில்லை.

தமிழர்களுக்கு நீதியையும் உரிமையையும் பெற்றுத்தருகிறோம் என ஐ.நா. வரை செல்லும் தமிழ் அரசியல் தலைவர்களும் புலம்பெயர் நாடுகளிலுள்ள தமிழ் அமைப்புகளும் சத்துருக்கொண்டான் உட்பட கிழக்கில் நடந்த படுகொலைகள் பற்றி எதுவுமே பேசியது கிடையாது.



*( இக்கட்டுரை நீதியரசர் கே.பாலகிட்ணர் தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் **( Panal Report of the Commission on Disappearances in the Northern & Eastern Provinces )** என்ற 145 பக்க அறிக்கை, பாதிக்கப்பட்ட மக்கள் மட்டக்களப்பு சமாதானக்குழுவுக்கு வழங்கிய வாக்குமூலங்கள் அடங்கிய அறிக்கை ஆகியவற்றை ஆதாரமாக வைத்து எழுதப்பட்டதாகும்)*

## கண்டதும்... கேட்டதும்... பார்த்ததும்...!

*அநுராதபுரத்தில் அநாகரீகமாக நடந்துகொண்ட 107 ஜோடிகள் கைதுசெய்யப்பட்டதாக கடந்த வாரம் வந்த செய்தியை பல ஊடகங்கள் வெளியிட்டன...*

*நேற்று நண்பர் ஒருவர் தொலைபேசி அழைப்பையெடுத்து இதுபற்றி வினவினார். அதென்ன 107 ஜோடிகள் 106 அல்லது 108 ஜோடிகள் என்றல்லவா இருந்திருக்கவேண்டும்? அந்த எஞ்சிய ஒருவர் யார் என்று வினவினார் நண்பர்...*

*சரிதான்... செய்தியை வெளியிட முன்னர் ஒரு தடவைகளுக்கு இருதடவை அதனை சரிபார்க்கும் பழக்கம் ஊடகங்களில் அருகி வருகிறது...*

*அதற்கு இதைவிட வேறெந்த உதாரணத்தை சொல்லிவிட முடியும்...*

**- சிவா -**
siva@liberty.lk



# புதுபுன் சுரக்‌ஷா சுகாதார காப்புறுதித் திட்டம் ஒக்டோபர் முதலாம் திகதி முதல் ஆரம்பம்

## பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ அறிவுறுத்தல்

15 ஆயிரம் பிக்குமார்களை உள்ளடக்கும் வகையிலான புதுபுன் சுரக்‌ஷா சுகாதார காப்புறுதித் திட்டத்தை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ அறிவுறுத்தியுள்ளார்.

புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டதன் பின்னர் நடைபெற்ற புத்தசாசன நிதியத்தின் 84ஆவது நிர்வாக சபைக் கூட்டம் நேற்று முன்தினம் அலரிமாளிகையில் இடம்பெற்றது. இதன்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, நிர்வாக சபை உறுப்பினரான கலாநிதி. திவியாகஹ யசஸ்தி தேரர், பிரதமரின் செயலாளர் காமினி செனரத், புத்தசாசன சமய மற்றும் கலாசார அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன, புத்தசாசன நிதியத்தின் செயலாளர் டபிள்யூ.டி.எச்.ருசிர விதான, புத்தசாசன நிதியத்தின் பொது அறங்காவலர் சட்டத்தரணி ஜீ.கரவிட்ட ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.

அதற்கமைய, புதுபுன் சுரக்‌ஷா சுகாதார காப்புறுதித் திட்டத்துக்கு ஆரம்பத்தில் புத்தசாசன நிதியத்திலிருந்து 40 மில்லியன் ரூபா நிதியை வழங்குமாறும் பிரதமர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார். அதற்கு மேலதிகமாக இந்த நிதியத்துக்கு அரசாங்கத்தினால் 50 மில்லியன் ரூபா வழங்கப்படவுள்ளதுடன், இந்த நிதியத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ அறிவுறுத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது பிரதமரின் ஆலோசனைக்கமைய,

1. இதுவரை 100 வயதுக்கு மேற்பட்ட பிக்குமார்கள் மாத்திரம் வழங்கப்பட்ட வைத்திய கொடுப்பனவு மற்றும் பராமரிப்பு முறைகளை 90 வயதாக குறைத்தல்.

2. மூன்று ஆண்டுகளுக்கு இளம் பிக்குமார்களுக்கு (சாமனேர ஹிமிவருன்) வழங்கப்படும் புலமைப்பரிசில் எண்ணிக்கையை 800 இலிருந்து ஆயிரத்து 500 வரை அதிகரித்தல். 750 ரூபாவாக காணப்பட்ட அந்த புலமைப்பரிசில் தொகையை ஆயிரம் ரூபாவாக அதிகரித்தல்.

3. குறைந்த வசதிகளைக்கொண்ட விகாரைகளின் சுகாதார நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட ஒரு இலட்சம் ரூபா நிதியை கலாநிதி திவியாகஹ யசஸ்தி தேரரின் விசேட கோரிக்கைக்கமைய ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வரை அதிகரித்தல்.

4. நாடு முழுவதும் காணப்படும் 20 இளம் பிக்குமார்களுக்கான அமைப்புகளை மேம்படுத்துதல்.

5. சீன அரசாங்கத்தினால் வழங்கப்படும், சீனமொழி பயிற்சியைப் பெற்றுக்கொள்வதற்கு கொவிட-19 நோய்த் தொற்று கட்டுப்படுத்தப்பட்ட தன் பின்னர் நூறு பிக்குமார்களை ஈடுபடுத்துதல்.

6. விகாரைகளை அண்மித்த பகுதிகளில் காணப்படும் ஓய்வு மண்டபங்களுக்கான கட்டணங்களை அறவிடப்படாமல், அங்கு தங்குபவர்களினால் வழங்கப்படும் தொகையை மாத்திரம் பெற்றுக் கொள்ளுதல்.

7. பிக்குமார்களுக்கு மொழி கல்வியை (விசேடமாக தமிழ் மொழி) வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்தல்

ஆகிய விடயங்கள் தொடர்பில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.







**கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் இலக்கிய களம் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில், பேராசியர் வ.சிவலோகதாசன், கலைமாமணி எஸ். ஸ்ரீதயாளன் மற்றும் உடப்பூர் வீரசொக்கன் ஆகியோர் கலந்துகொண்டதை படத்தில் காணலாம். (படம் :உடப்பூர்)**



**மோதரை பிரதேசத்தில் 4 மில்லியன் ரூபா பெறுமதியான 18 ஆயிரத்து 900 போதை மாத்திரைகளுடன் இரண்டு சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். லொரியொன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.**

# 10 கிலோ தங்கக் கட்டிகளுடன் சந்தேகநபரொருவர் கைது

வெளிநாட்டுக்கு அனுப்பிவைப்பதற்காக கொண்டுசெல்லப்பட்ட 10 கிலோ தங்கக் கட்டிகளுடன் சந்தேகநபரொருவர் புத்தளம் விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்று கற்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பலாவி, கற்பிட்டி வீதியில் பாலன்துடாவ சந்தியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வேகன் ஆர் ரக மோட்டார் வாகனத்தில் சூட்சுமமான முறையில், வாகன இருக்கையில் மறைத்துவைக்கப்பட்டிருந்த நிலையிலேயே இந்த தங்கக் கட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்தச் சுற்றிவளைப்பின்போது புத்தளம், கந்தக்குடிய பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# 28 அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள் நியமனம்

புதிய நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடருக்கான 28 அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்கள் இந்தக் குழுக்களின் தலைவர்களாகச் செயற்படுவார்கள். இதற்கு மேலதிகமாக இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் தெரிவுக்குழுவினால் பரிந்துரைக்கப்படும் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் குழுக்களில் உள்ளடங்குவார்கள்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வோர் அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினதும் கூட்ட நடப்பெண் 3 உறுப்பினர்களைக்கொண்டதாக அமையும்.

அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களை நியமிப்பது தொடர்பான தகவல்கள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவால் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

# டுபாயில் சிக்கித் தவிக்கும் இலங்கையர்கள்

## பொது இடங்களில் தங்கி யாசகம் பெறும் நிலைமையில்!

டுபாய் - அல்-ஹுதைபா பூங்காவில் வாழ்க்கை நடத்திய 20இற்கும் மேற்பட்ட இலங்கையர்களுக்கு சமூக சேவையாளர்களின் உதவியுடன் தங்குமிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

வருகை விசாக்களில் ஐக்கிய அரபு எமிரேட்ஸிற்கு வந்து, சிக்கித் தவிக்கும் இலங்கையர்களுக்கு உதவ சமூக சேவையாளர்கள், இலங்கை நலச் சங்கம், சஹானா மற்றும் டுபாயில் உள்ள இலங்கை துணைத் தூதரகம் ஆகியன முன்வந்துள்ளன. அவர்கள் அனைவரும் வருகை விசாக்களில் வந்ததால் டுபாயில் வேலைவாய்ப்புகள் கிடைக்கவில்லை- என்று டுபாயிலுள்ள இலங்கை துணைத்தூதுவர் நலிந்த விஜேரத்ன தெரிவித்துள்ளார். அவர்களுக்கு உதவுவதில் தூதரகம் முனைப்பாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

தங்குமிட வசதிகள் இல்லாத அனைவருக்கும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும் என்று நலன்புரி குழுக்கள் உறுதிப்படுத்தியுள்ளன. இங்குள்ள இலங்கையர்களில் பெரும்பாலானவர்கள் திரும்பிச்செல்ல டிக்கெட் வாங்கவோ, தனிமைப்படுத்தலுக்கு பணம் செலுத்தவோ வசதியற்றவர்கள். குளிப்பதற்கும் இடமில்லை. வீதியால் நடந்து செல்வோர் கொடுக்கும் உணவில் நாங்கள் வாழ்கிறோம் என்று சிக்கித் தவித்த இலங்கை ஒருவர் கூறினார்.

இதேவேளை, சஹானா தொண்டு நிறுவனத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் பல்வேறு தங்குமிடங்களில் பெண்கள் உட்பட 110 இலங்கையர்கள் இருப்பதாக சஹானாவின் பணிப்பாளர் விஸ்வ திலகரத்ன தெரிவித்துள்ளார்,

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது;





நாங்கள் கடந்த வாரம் 20 பேரை தங்குமிடங்களுக்கு மாற்றினோம், இப்போது மேலும் 10 பேர் அதே பூங்காவில் தங்கியுள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த புதிய குழு குறித்து எங்களுக்கு அறிவிக்கப்பட்டது. நாங்கள் விரைவில் அவர்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்போம். செப்டெம்பர் 10 ஆம் திகதி இலங்கை செல்ல திட்டமிடப்பட்ட விமானத்தில் அவர்களை திருப்பியனுப்புவோம்.

எங்கள் ஆதரவாளர்களின் ஆதரவோடு இந்த முகாம்களை செயற்படுத்தி வருகிறோம். தற்போது, ஒரே நேரத்தில் மேலும் 100 பேர் தங்கக்கூடிய தங்குமிட வீடுகளைத் தேடிவருகிறோம். இலங்கைக்குத் திரும்புபவர்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்குட்படவேண்டும். நிறுவன தனிமைப்படுத்தலுக்கு பணம் செலுத்த வேண்டும். அந்த வசதியில்லாதவர்களுக்கு தொண்டு நிறுவனம் உதவியளிக்கிறது. சில நபர்கள் வீடு திரும்புவதற்கான முன்னுரிமையைப் பெறுவதற்காக தொடர்ந்து பூங்காவில் தங்க முயற்சிக்கிறார்கள்.

பூங்காவில் தங்கியிருந்தவர்களை இலங்கைத் தூதரகம் பொறுப்பேற்று, சஹானா ஏற்பாடுசெய்த முகாம்களுக்கு மாற்றுவதற்கு முன்னர், அவர்கள் பூங்காவிலேயே நாட்களை கழித்து வந்தனர். அப்போது அவர்களுக்கு அந்தப் பகுதி மக்கள் உணவு, தண்ணீர், மெத்தை மற்றும் பிற அடிப்படை வசதிகளை வழங்கினர். இப்பகுதியில் வசிக்கும் இந்தியரான பிரக்யா ஷா, சிக்கித் தவிக்கும் நபர்களுக்கு சூடான உணவு, பிஸ்கட் மற்றும் பிற வசதிகளை வழங்கி வருகிறார். அவர் டுபாயிலுள்ள மற்ற இலங்கையர்களை அணுகினார், அவர் இலங்கை நலச் சங்கத்துடன் தொடர்பு கொண்டார்.

ஒரு கட்டத்தில் குறைந்தது 25 பேராவது இருந்தனர். அவர்கள் அனைவரும் வார இறுதியில் தங்குமிடங்களுக்கு மாற்றப்பட்டனர். தற்போதும் சிலர் இருக்கிறார்கள். நான் அவர்களுக்கு உணவு, சிற்றுண்டி மற்றும் பிற அடிப்படை வசதிகளை வழங்கிவருகிறேன். அவர்களுக்கு அடிப்படை சுகாதார வசதிகள் இல்லாததால் எனது கவலை அதிகரித்து வருகிறது என்று தெரிவித்துள்ளார்.

**19,000 இலங்கையர்கள் திருப்பி அனுப்பப்பவுள்ளனர்**

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் ஏராளமான இலங்கையர்கள் நாடு திரும்ப பதிவு செய்துள்ளனர். இவர்களில் பலருக்கு ரிக்கெட் கட்டணம், பி.சி.ஆர். பரிசோதனை கட்டணம் செலுத்தமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தற்போது,19 ஆயிரம் பேர் திரும்பிச்செல்ல விரும்புகிறார்கள். தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் விமான டிக்கெட்டுகளை வாங்க முடியாத சுமார் 5 ஆயிரம் பேர் பதிவுசெய்துள்ளதாகவும் அவர்களின் தேவைகளுக்கு பணம் செலுத்தியுள்ளதாகவும் டுபாயிலுள்ள இலங்கை துணைத் தூதுவர் நலிந்த விஜேரத்ன கூறியுள்ளார்.

**ஐ.ஓ.எம். பிரதானி சரத் டாஸ் – டக்ளஸ் சந்திப்பில்**

# 4500 பலநாள் மீன்பிடிக் கலங்களுக்கு கண்காணிப்பு உபகரணங்களை பொருத்த ஐ.ஓ.எம். இணக்கம்

பலநாள் மீன்பிடிக் கலங்களுக்கு விரைவில் கண்காணிப்பு உபகரணங்களை பொருத்துவதற்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதுதொடர்பான கலந்துரையாடல் ஐ.எம்.ஓ. (சர்வதேச புலம்பெயர்தல் தொடர்பான அமைப்பு) நிறுவனத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பிரதானி சரத் டாஸ், இலங்கைக்கான அதிகாரி சாந்த குலசேகர மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையில் நேற்று கொழும்பில் அமைந்துள்ள அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது உடனடியாக சுமார் 4 ஆயிரத்து 500 பலநாள் மீன்பிடிக் கலங்களுக்கு கண்காணிப்பு உபகரணங்களை பொருத்துவதற்கு சர்வதேச கடற்றொழில் செயற்பாடுகள் தொடர்பான விவகாரங்களை கையாளுக்கின்ற அமைப்பான ஐ.ஓ.எம். நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இதன்போது வி.எம்.எஸ். கருவிகள் பொருத்தப்படுவது சர்வதேச நியமங்களில் ஒன்றாக காணப்படுவதுடன், பலநாள் மீன்பிடிக் கலங்களில் ஆழ்கடலுக்குச் செல்லும் மீன்பிடியாளர்கள் நாடுகளுக்கிடையேயான எல்லைகளைத் தாண்டுவது மற்றும் இயற்கை அனர்த்தங்களால் திசைமாறிச் செல்வது போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டு தேவையற்ற அசௌகரியங்களை தவிர்க்க முடியும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், கடல்வழியாக நடைபெறும் போதைப்பொருள் கடத்தல் மற்றும் ஆட்கடத்தல் போன்ற சட்டவிரோத செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் குறித்த உபகரணங்கள் உதவும் என்று தெரிவித்த அமைச்சர், வி.எம்.எஸ். கருவிகளின் செயற்பாட்டை வினைத்திறனாக மாற்றும் கடற்றொழில் அமைச்சின் முயற்சிகளுக்கு ஐ.எம்.ஓ. நிறுவனம் வழங்கும் உதவிகளுக்கு தனது நன்றிகளையும் ஐ.ஓ.எம். பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சுமார் 6 ஆயிரம் பலநாள் மீன்பிடிக் கலங்கள் தொழிலில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், சர்வதேச மீன்பிடி நியமங்களில் ஒன்றாக காணப்படும் வி.எம்.எஸ். (கப்பல் கண்காணிப்பு முறை) உபகரணங்கள் இதுவரை சுமார் 1500 பலநாள் கலங்களுக்கு மாத்திரமே பொருத்தப்பட்டுள்ளன. அவ்வாறு பொருத்தப்பட்டவற்றிலும் 600 வி.எம்.எஸ். கருவிகள் மாத்திரமே தொழிற்படுவதாக பலநாள் கலங்களின் உரிமையாளர்களினால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் முறையிடப்பட்டிருந்த நிலையில், அமைச்சரின் தொடர் முயற்சியினால் தற்போது முதற் கட்டமாக 4500 வி.எம்.எஸ். கருவிகள் பொருத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் இணைப்புச் செயலாளராக உமாச்சந்திரா பிரகாஷ் நியமிக்கப்பட்டுள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முற்பகல் இந்த நியமனம் வழங்கப்பட்டது.

தமிழன்
புதன்கிழமை, செப்டெம்பர் 09, 2020

# கண்டி மாவட்டம் முழுவதும் இனி இ.தொ.கா.வின் சேவைகள் தொடரும்

## வீடுகளுக்கான திறப்புகளைக் கையளிக்கும் நிகழ்வில் பாரத் அருள்சாமி தெரிவிப்பு

(தலவாக்கலை)

"லெவலன்ட் தோட்டம் நியூ பொரஸ்ட் பிரிவு மக்களுக்கான காணி உரிமைப்பத்திரம் நிச்சயம் வழங்கப்படும். அத்துடன் உட்கட்டமைப்பு வசதிகளும் விரைவில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்" - என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப செயலாளரும், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் முன்னாள் தலைவருமான பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

கண்டி, லெவலன்ட் தோட்டம் நியூ பொரஸ்ட் பிரிவில் வாழும் 60 குடும்பங்களுக்கான வீடுகளுக்கான திறப்புகளைக் கையளிக்கும் நிகழ்வு கண்டிக்கான இந்திய உயர்ஸ்தானிகர் திரேந்திரசிங் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றிய பாரத் அருள்சாமி கூறியதாவது,

"இப்பகுதி மக்களுக்கான வீடுகளை அமைப்பதற்கு உதவிகளை வழங்கிய இந்திய அரசாங்கத்துக்கும், பிரதமர் நரேந்திர மோடிக்கும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பாகவும், இலங்கை அரசாங்கம் சார்பாகவும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் வீடுகள் அமைக்கப்பட்டாலும் உட்கட்டமைப்பு வசதிகளை அரசாங்கமே ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். ஆனால், கடந்த அரசாங்கம் அதனை செய்யவில்லை. இதனால் ஒரு வருடத்துக்கு மேலாக இவ்வீட்டுத்திட்டம் திறக்கப்படவில்லை.

மக்கள் நலன்கருதியே தற்காலிக ஏற்பாடாக வீடுகள் திறக்கப்பட்டன. விரைவில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் வழிகாட்டலுடன் உட்கட்டமைப்பு வசதிகள் செய்துகொடுக்கப்பட்டு, காணி உறுதிப்பத்திரமும் வழங்கப்படும். ஆட்சி அதிகாரத்தில் இருந்தவர்கள் கடந்த காலத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை உரிய முறையில் செய்துகொடுத்திருக்க வேண்டும். அதனை கடந்த அரசாங்கத்தில் இருந்தவர்கள் செய்ய தவறிவிட்டார்கள்.

எனவே, கடந்த அரசாங்க காலப்பகுதியில் இருந்த அமைச்சர்கள், உறுப்பினர்கள் பல வீடமைப்புத் திட்டம் கொண்டுவரப்பட்டது.

அதனடிப்படையில் முதலாவதாக இந்திய அரசாங்கம் 4,000 வீடுகளை வழங்கியது, அதன்பின் இந்திய பிரதமர் டிக்கோயா பகுதிக்கு வருகை தந்தபோது மேலதிகமாக 10 ஆயிரம் வீடுகளை தருவதாகவும் தெரிவித்திருந்தார்.

ஆட்சியதிகாரம் இல்லாத நிலையிலும் காங்கிரஸ் மீது நம்பிக்கை வைத்து, கண்டி மாவட்ட மக்கள் எமக்கு வாக்களித்தனர். எனவே, தற்போது எமது பொதுச் செயலாளர் இராஜாங்க அமைச்சராக இருக்கிறார். அவரின் வழிகாட்டலுடன் கண்டி மாவட்டத்திலுள்ள பெருந்தோட்டப் பகுதிகளும் அபிவிருத்தியடையும். இதற்கு அப்பகுதியிலுள்ள அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களும் ஒத்துழைப்பு வழங்குவார்கள்" - என்றார்.

இராஜாங்க அமைச்சர் அனுராத ஜெயரத்ன, இ.தொ.கா.வின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் விசேட பிரதிநிதியாக பாரத் அருள்சாமி, இ.தொ.கா.வின் உப தலைவரும், முன்னாள் சபை முதல்வருமான மதியுகராஜா, பிரதேச சபை உறுப்பினர்கள், காங்கிரஸ் மாவட்ட அமைப்பாளர், தோட்டத் தலைவர்கள் உட்பட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.










# மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலை கட்டிடத்தொகுதியில் குளவிக்கூடுகள்:

## ஊழியர்களும் நோயாளிகளும் பீதியில்

(மஸ்கெலியா)

மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையின் 3ஆவது மாடி கட்டிடத் தொகுதியில் பாரிய குளவிக்கூடுகள் உள்ளதால், வைத்தியசாலையில் தங்கியுள்ள நோயாளிகள், பயத்துடன் சிகிச்சைபெற்று வருவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

மேலும், வைத்தியசாலையில் பணிபுரிவோரும் மிகவும் அச்சத்தின் மத்தியில் பணிபுரிவதாகவும், தூய காற்றை சுவாசிக்க யன்னல்களை திறக்கமுடியாத நிலை தோன்றியுள்ளதாகவும் கூறுகின்றனர்.

இதுவிடயமாக கடந்த காலங்களில் பத்திரிகையில் செய்திகள் பிரசுரமானபோதும், இன்றுவரையில் முழுமையாக குளவிக்கூடுகளை அகற்றவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறித்த குளவிக்கூடுகளை அகற்ற முன்வரவேண்டும் என வைத்தியசாலையில் பணிபுரிவோரும், நோயாளிகளும் கோரிக்கை விடுக்கின்றனர்.






# எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலை கழிவுகளால் சுகாதாரச் சீர்கேடு: தொற்றுநோய் அச்சுறுத்தலென பொதுமக்கள் விசனம்

(இரத்தினபுரி)

எம்பிலிப்பிட்டிய அரச வைத்தியசாலையின் கழிவுப்பொருட்கள் முறையான விதத்தில் அகற்றப்படாமையால், சுகாதார வைத்திய சீர்கேடுகளை எதிர்கொண்டுவருவதாக பிரதேசத்தில் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ள பொதுமக்கள் முறையிடுகின்றனர்.

வைத்தியசாலையிலிருந்து வெளியாகும் கழிவுநீரும், அதனோடிணைந்ததாக வெளியேறும் வைத்தியசாலை கழிவுகளும் பின்புறமாகவுள்ள வாய்க்கால்களின் மூலம் வடிந்தோடி வயல் நிலங்களை அடைவதால் சுகாதார பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

வைத்தியசாலையின் கழிவுப்பொருட்களான குப்பைகள், சேலைன் பிளாஸ்ரிக் போத்தல்கள், தடுப்பூசி குழாய்கள், தடுப்பூசிகள், பஞ்சுக் கழிவுகள் மற்றும் இரசாயன கழிவுப் போத்தல்கள் வீதியோரத்திலுள்ள கான்களின் மூலம் உடவளவை நீர்த்தேக்கம் சந்திரிக்காவெவ ஆகியவற்றுக்கும் அயலிலுள்ள வயல் நிலங்கள் மற்றும் விவசாய நிலங்களையும் சென்றடைவதால், பாரிய பிரச்சினையை எதிர்கொள்ளவேண்டியுள்ளதாக பாதிக்கப் பட்டோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயமாக எம்பிலிபிட்டிய நகர சபை, பிரதேச சபை ஆகியவற்றுக்கும் ஏனைய பொது அமைப்புகளுக்கும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளபோதிலும், இதுவரை முறையான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படாமையால், இப்பகுதி பொதுமக்கள் தொடர்ந்து தொற்றுநோய் அச்சுறுத்தல்களையும், நீண்டகால சுகாதார பாதிப்புகளையும் எதிர்கொண்டுள்ளதாகவும், இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனத்திற்கொண்டு இப்பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுத்தருமாறு பொதுமக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

# பேருவளை கடலில் மிதந்த நிலையில் பெண்ணொருவரின் சடலம் மீட்பு

(களுத்துறை)

பேருவளை பொலிஸ் நிலையத்திற்கு அண்மித்த பகுதியில் கடலில் மிதந்த நிலையில், பெண்ணொருவரின் சடலம் பேருவளை பொலிஸாரால் நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

சடலமாக மீட்கப்பட்ட குறித்த பெண்ணுக்கு சுமார் 45 வயது இருக்கலாமெனவும், குறித்த பெண் யாரென இதுவரையிலும் அடையாளம் காணப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர். மேற்படி பெண்ணின் சடலம் தொடர்பில் பேருவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# போலி அக்குபஞ்சர் வைத்திய ஆலோசகர் கைது!

(நோட்டன் பிரிட்ஜ்)

அக்குபஞ்சர் சிகிச்சை முறைக்கு வைத்திய ஆலோசனை வழங்கும் போலி வைத்தியர் ஒருவரை ஹட்டன் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

புத்தளம் பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய 14 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு ஹட்டன் ஹிஜ்ராபுரம் பகுதியில் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹட்டன் பிரதேச மக்கள் ஹட்டன் ஜும்மாஆ பள்ளிவாசல் நிர்வாகத்திடம் முன்வைத்த முறைப்பாட்டுக்கமைய, பள்ளிவாசல் நிர்வாகம் ஹட்டன் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கமையவே மேற்படி போலி அக்குபஞ்சர் வைத்தியர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.



கைதுசெய்யப்பட்ட குறித்த நபரிடம் வைத்தியருக்கான எவ்வித ஆதாரங்களும் இல்லை என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும் ஹட்டன் ஹிஜ்ராபுரத்தில் நாளொன்றுக்கு வீடொன்றை வாடகைக்குப் பெற்று மேற்படி சிகிச்சைக்கான ஆலோசனையை வழங்கிவந்துள்ளார். இவ்வாறு தொடர்ச்சியாக மூன்றாவது முறை வந்தபோதே கைதுசெய்யப்பட்டுள்ளார். சிகிச்சை தொடர்பில் ஆலோசனைக்காக வரும் நபர்களிடம் தலா 800 ரூபா பணம் வசூலித்துள்ளார்.

குறித்த வைத்திய ஆலோசனை வழங்குவது தொடர்பிலும் துண்டுப்பிரசுரங்களும் விநியோகம் செய்துள்ளமை தெரியந்துள்ளது. கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபர் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

# கஞ்சா மற்றும் சுருட்டு வைத்திருந்த ஐவர் கைது!

(மஸ்கெலியா)

மஸ்கெலியா சாமிமலைப் பகுதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் கஞ்சா மற்றும் சுருட்டு வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் 5 பேர் மஸ்கெலிய பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி யசரத்ன பண்டார தலைமையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பிலேயே மேற்படி ஐவரும் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு கைதுசெய்யப் பட்டவர்கள் 21 முதல் 30 வயது மதிக்கத்தக்க வர்கள் எனவும், சாமிமலை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரும், ஏனைய நால்வர் ஹட்டன் பகுதியை சேர்ந்தவர்களெனவும் மஸ்கெலிய பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களிடமிருந்து கஞ்சா சுருட்டு ஒன்றும் ஏனைய நால்வரிடமிருந்து முறையே கஞ்சா 225 மில்லிகிராம், 850 மில்லிகிராம், 475 மில்லிகிராம், 350 மில்லிகிராம் என கைப்பற் றப்பட்டது. கைதுசெய்யப்பட்ட ஐவரையும் ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய் யப்படவுள்ளதாக மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

# 160 உறுப்பினர்களின் ஆதரவுடன் 20ஆவது திருத்தம் நிறைவேறும்

## இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவிப்பு

(இரத்தினபுரி)

160 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் 20ஆவது அரசியலமைப்பு சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் - என கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புற தெரிவித்தார்.

எம்பிலிபிட்டியவில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்வுகளின் பின் செய்தியாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை நாம் நிறைவேற்றியே தீருவோம். அதற்குப் போதுமான 2/3 ஆதரவு எமக்கு நாடாளுமன்றத்தில் இருக்கிறது. இவ்விடயத்தில் நாம் உறுதியாக உள்ளோம். எனவே, எமது பெரும்பான்மை விடயத்தில் யாரும் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.

எனவே, இம்முறை வரவு-செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன், நாம் 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றி காட்டுவோம். 19ஆவது திருத்தச் சட்டமூலத்தின் ஊடாக ஜனாதிபதியின் நிறைவேற்றதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் எமது நாடு சந்தித்த பாரதூரமான பிரச்சினைகள் அனைத்திற்கும் ஜனாதிபதியின் அதிகாரம் குறைக்கப்பட்டமை பிரதான காரணமாக அமைந்துள்ளது. 19ஆவது திருத்தச் சட்டமூலத்தில் நல்ல விடயங்களும் இருக்கின்றன. ஆனால், அதிலுள்ள நாட்டுக்கு பொருத்தமற்ற விடயங்களை நீக்குவோம்" - எனவும் தெரிவித்தார்.

# லிந்துலை தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிக்கரம் வழங்கினார் பிலிப்பைன்ஸ் தூதரக பெண் ஊழியர்

(லிந்துலை)

லிந்துலை பம்பரகலை மிடில் பிரிவில் கடந்த மாதம் 10ஆம் திகதி இரவு ஏற்பட்ட தீ விபத்தில் 24 குடியிருப்புகளைக்கொண்ட லயன் தீக்கிரையானது.

இதனைக் கேள்வியுற்ற, பிலிப்பைன்ஸ் இலங்கைக்கான தூதரகத்தில் பணிபுரியும் இலங்கை சகோதர மொழி பெண்ணான சோபினி குணசேகர ஒருவர் மற்றும் அவரின் மகள்களான கியாரா, சமீரா, வினித், கலத்மீ ஆகியோரும் ஒன்றிணைந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் உதவிகளை நேற்று முன்தினம் வழங்கியுள்ளனர்.

இதனை பெற்றுத்தர உதவிய கலா, பிரபாவதி (கொழும்பு) மற்றும் சசிக்குமார் குழுவினர்களுக்கும் பாதிக்கப்பட்ட மக்கள் தனது நன்றிகளைத் தெரிவித்தனர்.





# சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட எட்டு பேர் கைது!

(நோட்டன் பிரிட்ஜ்)

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொகவந்தலாவை லெச்சுமி தோட்டம் எலபட கீழ்ப்பிரிவு தோட்ட வெளிக்கள உத்தியோகத்தரின் விடுதிக்கு அருகாமையிலும் மற்றும் காசல்ரீ நீர்த்தேக்கத்திற்கு நீர் ஏந்திச்செல்லும் கிளை ஆறு ஒன்றிலும் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டுவந்த எட்டுபேர் ஹட்டன் குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்,

நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே இக்கைது இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பகுதியில் நீண்டகாலமாக இடம்பெற்றுவந்த இந்தச் சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வு தொடர்பில் ஹட்டன் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைய ஹட்டன் பொலிஸ் நிலையத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விதித்த அல்விஸின் பணிப்புரைக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது இந்தக் கைது இடம்பெற்றது.



மேலும், சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங் களையும் பொலிஸார் மீட்டுள்ளதோடு, கைதுசெய்யப்பட்ட எட்டு சந்தேகநபர்களும் பலாங்கொடை, பொகவந்தலாவை, நோர்வூட் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களென ஹட்டன் குற்றத்தடுப்புப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது,

இதேவேளை, மாணிக்கக்கல் அகழ்வு மேற்கொள்ளப்பட்ட கால்வாயிலிருந்து தோட்ட வெளிக்கள உத்தியோகத்தரின் விடுதிக்குள் பாரிய சுரங்கக் குழிகளை ஏற்படுத்தியிருப்பதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

மடுல்சீமை பெருந்தோட்ட நிறுவனத்தின்கீழ் இயங்கும் இந்த விடுதிக்கு அருகாமையில் தொடரும் இந்தச் சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வில், விடுதியின் சுற்றுபுறம் முழுவதும் பாரிய வெடிப்புகள் ஏற்பட்டுள்ளதோடு, சரிந்து விழும் அபாயத்தில் காணப்படுகிறது.

இது தொடர்பில் கெர்க்கஸ்வோல்ட் தோட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கைதுசெய்யப்பட்ட எட்டு சந்தேக நபர்களையும் ஹட்டன் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டு வருவதோடு, சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஹட்டன் குற்றத்தடுப்புப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





20ஆவது அரசியலமைப்புத் திருத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கிய மக்கள் சக்தியால் ஏற்பாடுசெய்யப்பட்ட எதிர்ப்புப் போராட்டம் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் '19 இலிருந்து முன்னோக்கி' என்ற தொனிப்பொருளில் ஜப்பான் நட்புறவு மாவத்தையில் அமைந்துள்ள மாதுளுவாவே சோபித தேரரின் உருவச்சிலைக்கு அருகில் இடம்பெற்றது. அந்தப் போராட்டத்தில் கலந்துகொண்ட ஒருபகுதியினரை படங்களில் காணலாம்.

(படப்பிடிப்பு : பிரதீப் தம்பரகே)





# தடைசெய்யப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகளை விற்பனைக்காக கொண்டுவந்த இருவர் கைது!



(மஸ்கெலியா)

கம்பளை பிரதேசத்திலிருந்து டயகம பிரதேசத்திற்கு, அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட ஒருதொகை சிகரெட் வகைகளை வைத்திருந்த இருவரை டயகம பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து 3,000 சிகரெட்டுகள் அடங்கிய 150 சிகரெட் பக்கட்டுகளை கைப்பற்றியுள்ளனர். அத்தோடு, அவர்கள் பயணித்த முச்சக்கரவண்டியும் பொலிஸ் காவலுக்கு எடுக்கப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளது. மேலும் இவர்கள் இன்று நுவரெலிய நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் டயகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

மேலும் பொலிஸ் அதிகாரி கூறுகையில், வெளிநாட்டு சிகரெட் வகைகளை விற்பனைக்காக கொண்டு வருவோர் பற்றி விபரங்களை தருமாறு டயகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வர்த்தகர்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இதனடிப்படையிலேயே இக்கைது இடம்பெற்றது. டயகம, அக்கரப்பத்தனை, லிந்துலை போன்ற நகரங்களை இலக்குவைத்து இவ்வாறான சிகரெட் வகைகள் விற்பனைசெய்யப்படுவதாக பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இப்பகுதியிலுள்ள இளைஞர்களை மையப்படுத்தியே இவ்வாறான சிகரெட்டுகள் மற்றும் ஏனைய போதைப்பொருட்கள் விற்பனை மேற்கொள்வதற்கான ஆரம்பகட்டமாக இந்த வெளிநாட்டு சிகரெட்டுகள் இருக்கலாம் என சந்தேகிப்பதுடன், சந்தேக நபர்களிடம் தொடர்ந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் கால எல்லை 3 மாதத்துக்கு நீடிப்பு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் கால எல்லை மேலும் 3 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தில் ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலான விடயங்களை விசாரணைசெய்து அறிக்கையை சமர்ப்பிப்பதற்காக இந்த ஆணைக்குழு கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் 20ஆம் திகதி நியமிக்கப்பட்டது.

இதன் கால எல்லை மார்ச் மாதம் 20ஆம் திகதியுடன் நிறைவடையவிருந்தது. இருப்பினும், கடந்த மார்ச் மாதம் 17ஆம் திகதி வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் செப்டெம்பர் மாதம் 20ஆம் திகதி வரையில் ஆணைக்குழுவின் கால எல்லை 6 மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இறுதி அறிக்கையை தயாரிப்பதற்காக மேலும் கால எல்லையை வழங்கும் பொருட்டு அதன்கால எல்லை டிசம்பர் மாதம் 20ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 5 வருடங்களாக மூடப்பட்டிருந்த 'உலக முடிவு' செல்லும் நுழைவாயில் மீண்டும் திறப்பு

(இரத்தினபுரி)

பலாங்கொட நொன்பேரியல் தோட்ட நிர்வாகத்தால் கடந்த 5 வருடங்களாக பலாக்காரமாக மூடப்பட்டிருந்த 'உலக முடிவு' அல்லது 'வேல்ட்ஸ் என்ட்' சுற்றுலாத்தலத்துக்கு செல்லும் குறுகிய தூர பாதையின் நுழைவாயிலை மீண்டும் திறக்க இரத்தினபுரி இணைப்புக்குழு கூட்டம் அனுமதி வழங்கியுள்ளது.

இதனடிப்படையில் இவ்வீதியை அடுத்தவாரம் முதல் திறந்துவிடுவதாக இம்புல்பே பிரதேச சபைத் தலைவர் ஸ்ரீலால் செனரத் தெரிவித்தார்.

மேற்படி நுழைவாயில் வேல்ஸ் என்ட் பிரதேசத்துக்குச் செல்லும் குறுகிய வீதியாக வெளிநாட்டு, உள்நாட்டு உல்லாசப் பயணிகளால் பயன்படுத்தப்பட்டுவந்தது. எனினும், இவ்வீதி தனது நிர்வாகத்திலுள்ள நொன்பேரியல் தோட்டத்தினூடாக செல்வதால் தனிப்பட்ட காரணங்களுக்காக இத்தோட்ட நிர்வாகம் இதனை மூடியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதற்கிணங்க இவ்வீதியை திறக்க இரத்தினபுரி இணைப்புக் குழுக்கூட்டத்தில் அனுமதி தரப்பட்டதால், அடுத்த வாரம் முதல் இவ்வீதியை உத்தியோகபூர்வமாக திறந்துவைப்பதாகவும் அதன் பின் வெளிநாட்டு, உள்நாட்டு உல்லாசப் பயணிகள் தடையின்றி இக்குறுகிய வீதியூடாக உலக முடிவு பாதாளத்தைக் கண்டுகளிக்க செல்லலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

மேற்படி நுழைவாயில் அமைந்துள்ள நொன்பேரியல் தோட்டம் இம்புல்பே பிரதேச சபை நிர்வாக அதிகாரத்தின் கீழ் அமைந்துள்ளமையால், இவ்வீதியினூடாக உலக முடிவு பாதாளத்துக்குச் செல்லும் உல்லாசப் பயணிகளால் கிடைக்கும் வருமானம், இம்புல்பே பிரதேச சபைக்கு கிடைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# APIIT கல்வியகம் பட்டப்படிப்புகளை வழங்குவதற்காக டீக்கின் பல்கலைக்கழகத்துடன் கைகோர்க்கின்றது

A·P·I·I·T
ASIA PACIFIC INSTITUTE OF INFORMATION TECHNOLOGY

DEAKIN UNIVERSITY
Deakin University CRICOS Provider Code: 00113B

மாணவர்கள் கற்பதற்கு தனித்துவமான வழிமுறையொன்றை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக, டீக்கின் பல்கலைக்கழகம் மற்றும் ஆசிய பசுபிக் இன்ஸ்டிரியூட் ஒஃப் இன்போமேசன் டெக்னோலஜி (APIIT) ஸ்ரீலங்கா கல்வியகம் ஆகியவை பங்காளர்களாக கைகோர்த்துள்ளன.

APIIT ஸ்ரீலங்கா கல்வியகத்தில் இணைந்துகொள்ளும் மாணவர்கள் அங்கு முதலாவது வருட கற்கையை நிறைவுசெய்த பின்னர் அவுஸ்திரேலியாவின் டீக்கின் பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பமானி மற்றும் வணிகமானி ஆகிய பட்டக் கற்கைகளை தொடர்வதற்காக அப்பல்கலைக்கழகத்திற்கு இடமாற்றப்படுவதற்கான வசதியை இது வழங்குகின்றது.

APIIT ஸ்ரீலங்கா கல்வியகத்தின் கணினி பாடசாலைப் பிரிவின் தலைமை அதிகாரியான கலாநிதி பிரியந்த குமாரவடு பரஸ்பரம் அனுகூலமளிக்கும் விதத்திலான இந்த பங்காளித்துவம் தொடர்பாக கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார். "கல்வித்துறையில் 20 வருடங்களுக்கும் அதிகமான சிறப்புத்துவத்தைக் கொண்டுள்ள APIIT கல்வியகமானது மிகச் சிறந்த தராதரத்துடனான உயர் கல்வியை வழங்குகின்ற தனியார் உயர்கல்வி நிறுவகங்களுள் ஒன்றாக திகழ்கின்றது. அவுஸ்திரேலியாவின் டீக்கின் பல்கலைக்கழகத்துடன் ஏற்படுத்திக்கொண்டுள்ள இப் பங்காளித்துவம் APIIT கல்வியகம் அண்மைக்காலத்தில் உருவாக்கியுள்ள மிக கவர்ச்சிகரமான ஒரு கற்றல் பாதையாக அமையும்" என்று அவர் தெரிவித்தார்.

"அவுஸ்திரேலியாவில் உள்ள உலகத் தரம் வாய்ந்த பல்கலைக்கழகம் ஒன்றில் கற்பதை இலக்காகக்கொண்டுள்ள இலங்கை மாணவர்கள் APIIT ஸ்ரீலங்கா கல்வியகத்தில் முதலாம் வருட கற்கையை பூர்த்திசெய்த பின்னர், டீக்கின் பல்கலைக்கழகத்தில் இரண்டாம் வருட இளங்கலைப் பட்டப்படிப்பை தொடர்வதற்கான உள்நுழைவு அனுமதியை நேரடியாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

# கொவிட்-19 ஐ எதிர்த்துப் போராட JAT Holdings தனது புதிய JAT பராமரிப்பு உற்பத்திகளை அறிமுகப்படுத்துகிறது




மர பூச்சு உற்பத்திகளுக்கு இலங்கையில் அனைத்து வீடுகளிலும் உச்சரிக்கப்படும் நம்பகமான நாமமான JAT Holdings, உலகளாவில் கொவிட்–19 தொற்றுநோய் பரவி வருகின்ற இந்த சவாலான காலகட்டத்தில், "JAT Care" என்ற வர்த்தகநாமத்துடனான புதுமையான ஒரு உற்பத்தி வரிசையை தொழிற்துறையில் அறிமுகப்படுத்தி, தொற்றுநோய்க்கு எதிர்த்துப் போராடுவதற்கு முன்வந்துள்ளது. இலங்கையில் தனிப்பட்ட மற்றும் வீட்டுப் பராமரிப்பு உற்பத்திகளைப் பொறுத்தவரையில் சமீப காலங்களில் சந்தையில் ஒரு வலுவான போட்டியாளராக மாறியுள்ள ஒரு நிறுவனம் என்ற ரீதியில், கொரோனா வைரஸை எதிர்த்துப் போராடுவதில் நாட்டின் கூட்டு முயற்சிகளுக்கு உதவ, JAT Care Hand Sanitizer (ஹேன்ட் சானிடைசர்) மற்றும் JAT Care Disinfectant Surface Cleaner (மேற்பரப்பு தொற்றுநீக்கி) ஆகிய இரு புதிய உற்பத்திகளை தனது JAT Care உற்பத்தி வரிசையின் கீழ் அறிமுகப்படுத்தியுள்ளது.

உலக அரங்கில் இலங்கையின் புகழை நிலைநாட்டுவதில் எப்போதும் புதிய வர்த்தக வாய்ப்புகளை கண்டறிவதில் கவனம் செலுத்தியுள்ள, வேகமாக வளர்ச்சி கண்டு வருகின்ற ஒரு நிறுவனம் என்ற நற்பெயரை JAT சம்பாதித்துள்ளது. அதன் சமீபத்திய புத்தாக்கமாக, இலங்கையின் அனைத்து குடிமக்களின் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதில் நிறுவனத்தின் அர்ப்பணிப்பிற்கு சான்று பகரும் வகையில் JAT Care உள்ளது. உள்நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் மர பூச்சுத் துறையில் நிபுணத்துவம் மற்றும் மேன்மையைக் கொண்டுள்ளதுடன், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அங்கீகார ஒப்புதலுடன் ISO 9001 ஐக் கொண்ட மிக உயர்ந்த தரம் மற்றும் தராதரங்களின் கீழ் JAT தனது தயாரிப்புகளை உற்பத்தி செய்து வருகிறது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் கட்டாய தேவைப்பாடுகளுக்கு அமைவாக JAT Care Instant Hand Sanitizer உற்பத்தி செய்யப்படுவதுடன், தண்ணீரின்றி 99.99% ஆன கிருமிகளைக் கொல்ல உதவும் வகையில் 75% isopropyl alcohol (IPA) ஐக் கொண்டுள்ளது.



# பல்வேறு வழிமுறைகளில் தேயிலை கைத்தொழில் அபிவிருத்தி!



## ஜனாதிபதி ஆலோசனை

- ★ நட்டத்தில் இயங்கும் பெருந்தோட்ட நிறுவனங்கள் மீள்கட்டமைப்பு
- ★ வினைத்திறனை அதிகரிப்பதற்காக மீள் பயிர்ச்செய்கைக்கு முக்கியத்துவம்
- ★ புதிய வழிமுறைகளில் தேயிலை ஆராய்ச்சி








பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ள தேயிலைக் கைத்தொழிலை மேம்படுத்தல் பல்வேறு வழிமுறைகளின் மூலம் நடைபெற வேண்டுமென்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

நட்டத்தில் இயங்குகின்ற பெருந்தோட்டங்களை கண்காணித்து தேயிலை ஏற்றுமதி மற்றும் வருமானத்தை உயர்த்துவதற்கு நீண்ட, மத்திய மற்றும் குறுகியகால திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று துறைசார் நிபுணர்கள் சுட்டிக்காட்டினர். கைத்தொழிலின் வீழ்ச்சிக்குக் காரணமான விடயங்களை இனங்கண்டு உலக சந்தையில் இலங்கைத் தேயிலை **(Ceylon Tea)** க்கு காணப்பட்டுவந்த உயர் கேள்வியை மீண்டும் அடைந்துகொள்ளல் எமது இலக்காக இருக்க வேண்டுமென்று ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

கம்பனித் தோட்டங்களை மறுசீரமைத்தல், தேயிலைத் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச் செய்கை, தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல் மற்றும் தேயிலை ஏற்றுமதி மேம்பாடு இராஜாங்க அமைச்சின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக நேற்றுமுன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

பிரதானமான 20 தோட்ட நிறுவனங்களில் 10 நிறுவனங்கள் செயலிழந்துள்ளன. சிறு தேயிலைத் தோட்டங்கள் அதிகளவில் உற்பத்திசெய்யும்போது பெருந்தோட்ட நிறுவனங்களின் உற்பத்தியின் அளவு வேகமாக வீழ்ச்சியடைந்துள்ளமை தெளிவாகியுள்ளது. நட்டமடைவதற்கும் செயலிழப்பதற்குமான காரணங்களை குறுகிய காலத்தில் இனங்கண்டு நிரந்தரத் தீர்வுகளைத் தருமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். நட்டத்தில் இயங்கும் பெருந்தோட்ட நிறுவனங்களை ஒழுங்குபடுத்தும் செயற்றிட்டமாக சிறிய தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கு கையளித்து செயற்படுத்துவதற்கும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

வீதிகள், வைத்தியசாலைகள், பாடசாலைகள் மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை அரசாங்கத்தின் பங்களிப்புடன் வழங்கியிருக்கும்போது பெருந்தோட்ட நிறுவனங்கள் நட்டமடைவது தொடர்பாக ஆழமான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டுமென்று பொருளாதார புத்தெழுச்சி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ இங்கு குறிப்பிட்டார். உயர் விளைச்சலுக்காக தேயிலைத் தோட்டங்களை மறுசீரமைத்து மீண்டும் பயிர்ச்செய்கையை முறைப்படுத்துவதன் அவசியம் பற்றியும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

தேயிலைச் செடிகளில் விளைச்சலை பெறும் வரை பயிர்ச்செய்கையாளர்களுக்கு சுயதொழில் அல்லது வேறு ஏதேனும் தொழில்களில் ஈடுபடுவதற்கு சலுகைகளை வழங்குவதன் அவசியம் பற்றியும் பசில் ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார். தேயிலை பற்றிய புதிய ஆராய்ச்சிகளின் மூலம் பயனடையாமை கைத்தொழிலின் வீழ்ச்சிக்கு காரணமாக இருக்கின்றது என்பது நிபுணர்களின் கருத்தாகும். ஆராய்ச்சிக்கு முக்கியத்துவமளித்து புதிய சந்தை வாய்ப்புகளைக் கண்டறிவதன் அவசியம் பற்றியும் அவர்கள் சுட்டிக்காட்டினர். உலக சந்தையில் உயர் கேள்வியைக்கொண்ட பயோ தேநீர் கைத்தொழிலை விரிவுபடுத்தி இலாபம் ஈட்டுவது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது. பெருந்தோட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு பிரிவுகளை பலப்படுத்துவதன் அவசியம் பற்றியும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

கொவிட் நோய்த் தொற்றுக் காலத்தில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தியிருந்த காலத்தில் அரசாங்கம் எடுத்த தீர்மானங்கள் காரணமாக கிட்டதட்ட நான்கு இலட்சத்து இருபத்தோராயிரம் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் பாதுகாக்கப்பட்டதாக கூறிய சிறு தேயிலைத் தோட்டப் பிரதிநிதிகள் அதற்காக ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்தனர்.

அமைச்சர் ரமேஷ் பத்திரன, இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், பொருளாதார புத்தெழுச்சி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர, அமைச்சு, இராஜாங்க அமைச்சுகளின் செயலாளர்கள், துறைசார் நிறுவனங்களின் அதிகாரிகள், பெருந்தோட்டப் பிரதிநிதிகள் மற்றும் தேயிலை பயிர்ச்செய்கையாளர்கள் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

## இன்றைய ராசி பலன்கள்

09.09.2020 (புதன்கிழமை)

வித்வ கலாபூஷணம் ஜோதிட திலகம்
சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள்

| | |
|---|---|
| மேஷம் - | செலவு |
| ரிஷபம் - | பெருமை |
| மிதுனம் - | சுபம் |
| கடகம் - | பயம் |
| சிம்மம் - | சினம் |
| கன்னி - | வெற்றி |
| துலாம் - | அமைதி |
| விருச்சிகம் - | தீமை |
| தனுசு - | சுகம் |
| மகரம் - | ஆனந்தம் |
| கும்பம் - | ஆதரவு |
| மீனம் - | சோகம் |

**சுப நேரம்**
காலை: 06.15 -07.20
காலை: 04.34 - 06.04

**இராகு காலம்**
12.04
01.34

**எம கண்டம்**
07.34
09.04

# திட்டமிடப்பட்ட குற்றச்செயல்களின் குழுத்தலைவரான சஞ்சீவவுக்கு நெருக்கமான சுராஜ் கைது!





திட்டமிடப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுவின் தலைவராகக் கருதப்படும் சஞ்சீவவுக்கு நெருக்கமானவர் என்று கருதப்படும் சுராஜ் என்பவரும் இராணுவ வைத்திய படையிலிருந்து தப்பித்துச்சென்று தேடப்பட்டுவரும் சந்தேகநபரொருவரும் விசேட அதிரடிப்படை புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் வெல்லெகொடெல்ல, பத்துடுவன, மினுவங்கொட பிரதேசத்தில் அமைந்துள்ள வீடொன்றுக்கு அருகில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, வாகனமொன்றில் ஹெரோயின் போதைப்பொருள் உள்ளிட்ட மேலும் பல பொருட்களுடன் பயணித்துகொண்டிருந்த நிலையிலேயே, இவர்கள் கைதுசெய்யப்பட்டதாக விசேட அதிரடிப்படை புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

இதன்போது, தற்போது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள திட்டமிடப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுவின் தலைவராகக் கருதப்படும் சஞ்சீவ குமார சமரத்ன நொஹொத் மாகிலன்கமுவே சஞ்சீவவின் நெருக்கமானவர் என்று கருதப்படும் கல்கெடிய தேவலாகே சுராஜ் நொஹொத் வெலிபே சுராஜ் என்பவரும், அவருடன் இருந்த மற்றொரு நபருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

4 கிராம் 360 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள், 2 1/2 அடியுடைய 3 வாள்கள், 1 வேகன் ஆர் ரக கார் மற்றும் துப்பாக்கியொன்றும் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன. இவ்வாறு கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் இந்தச் சந்தேகநபர்கள் இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக மினுவாங்கொடை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சுராஜ் என்பவர் கடந்த 2018ஆம் ஆண்டு திட்டமிடப்பட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய குற்றவாளியாகக் கருதப்படும் களு அஜித் என்பவரை ஜாஎல பிரதேசத்தில் வைத்து கொலைசெய்ய முன்னெடுக்கப்பட்ட துப்பாக்கிச்சூட்டு முயற்சியின்போது, கொலொம்பியா வீதியில் மோட்டார் வாகனத்தில் பயணித்துக்கொண்டிருந்த பெண்ணொருவர் மீது பாய்ந்ததால் அந்தப் பெண் உயிரிழந்திருந்ததுடன், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற அடிப்படையில் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர், மினுவாங்கொடை பிரதேசத்தில் மண் விற்பனை செய்வதாகக் கூறி பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்ட விவகாரத்தில் தேடப்பட்டுவந்த சந்தேகநபர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதேவேளை, வேகன் ஆர் ரக வாகனத்தைச் செலுத்திய மற்றையவர் இராணுவ வைத்திய படையிலிருந்து தப்பித்துச்சென்று தேடப்பட்டுவரும் சந்தேகநபர் என்பதும் தகவல் உறுதிப்பாட்டின்போது தெரியவந்துள்ளது.

# அமெரிக்கத் தூதுவர் – நீதித்துறை அமைச்சர் சந்திப்பு

## வழக்குத் தீர்வுகளை விரைவுபடுத்தல் தொடர்பிலும் பேச்சு

நீதித்துறை அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி மொஹமட் அலி சப்ரிக்கும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா பீ. டெப்லிட்சுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று நீதித்துறை அமைச்சில் இடம்பெற்றது.



தற்போது இருக்கும் வழக்குகளுக்கான தீர்ப்புகளை வழங்குவதை விரைவுபடுத்தல், நீதிமன்ற கட்டமைப்புகளுக்கான அடிப்படை வசதிகளை பலப்படுத்துதல், சிறைச்சாலையில் காணப்படும் நெருக்கடி, நீதிபதிகளுக்கான பயிற்சி, விடுவிப்புக்குத் தேவையான நடவடிக்கைகள் உள்ளிட்ட நீதிமன்ற மற்றும் நீதியை நிலையநாட்டுவதுடன், தொடர்புடைய தற்போதைய நடவடிக்கைகள் தொடர்பிலும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் நீதித்துறை அமைச்சின் செயலாளர் சட்டத்தரணி பிரியந்த மாயாதுன்ன, அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் ஜனக ரணதுங்க ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

# கர்தினால் மெல்கம் ரஞ்சித் – விமல் வீரவங்ச சந்திப்பு



தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் தொழிற்றுறை அமைச்சருமான விமல் வீரவங்ச உள்ளிட்ட அந்தக் கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர் நேற்று கொழும்பு மறைமாவட்ட பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையை சந்தித்துக் கலந்துரையாடினர்.

அதன்போது பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கும் அமைச்சர் விமல் வீரவங்சவுக்கும் இடையில் ஒருமணிநேரம் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர்,

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பிலும் நாட்டின் தொழில்துறையை மேம்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாக தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய ஒருங்கிணைப்பாளரும் களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வழங்கல் வசதிகள், இயந்திரப் படகுகள் மற்றும் கப்பல் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான ஜயந்த சமரவீர ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## செந்தமிழாகம பயிற்சி நெறி சான்றிதழ்கள் வழங்கப்பட்டன



தென்கயிலை ஆதீனத்தில் இரண்டாவது செந்தமிழாகம அருட்சுனைஞருக்கான முதற்கட்டப் பயிற்சி நெறி நிறைவு நிகழ்வு கடந்த திங்கட்கிழமை மாலை நடைபெற்றது.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் இந்த பயிற்சிநெறியில் பங்குபற்றியிருந்தனர். இவர்களுக்கு ஆதீன மடாலயத்தில் வைத்து கற்கைச் சான்றிதழ் வழங்கப்பட்டன.

தென்கயிலை ஆதீனம் முதற்குரு தவத்திரு அகத்தியர் அடிகளார் மற்றும் இளையபட்டம் திருமூலர் தம்பிரான் தலைமையில் அகில இலங்கை சைவத்தமிழ் அறக்கட்டளை தலைமை அருட்சுனைஞர் உயிரொளி சிவம் பிரதாபனார், தமிழர் பாரம்பரிய வழிபாட்டு அமைப்பு செந்தமிழாகம அருட்சுனைஞர் தயாளன் ஐயா ஆகியோர் இணைந்து செந்தமிழாகம பயிற்சிநெறியை வழங்கினர்.

இந்நிகழ்வில் ஆதீன முதற்குரு தவத்திரு அகத்தியர் அடிகளார், செந்தமிழாகம தலைமை அருட்சுனைஞர் உயிரொளி சிவம் பிரதாபனார், செந்தமிழாகம அருட்சுனைஞர் தயாளன் ஐயா ஆகியோர் சான்றிதழை வழங்கினர்.




## 81 வயது முதியவர் தூக்கிட்டுத் தற்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சித்தாண்டி பிரதேசத்தில் 81 வயது முதியவர் ஒருவர் தூக்கில் தொங்கி தற்கொலை செய்துகொண்ட நிலையில், நேற்று செவ்வாய்க்கிழமை காலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

சித்தாண்டி பிரதான வீதியைச் சேர்ந்த 81 வயதுடைய பிள்ளையான் விஸ்வநாதன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த முதியவரின் உறவினர்கள் சம்பவதினமான திங்கட்கிழமை இரவு வீட்டில் இல்லாத நிலையில், தனிமையில் இருந்த முதியவர் வீட்டு அறையின் கூரையில் கயிற்றில் தூக்கிட்டு தற்கொலை செய்த நிலையிலேயே சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர் .

## மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களை இணைத்த மாதுரு ஓயா இடதுகரை அபிவிருத்தித் திட்டம் ஆரம்பம்

( மட்டக்களப்பு)

மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டங்களை உள்ளடக்கியதான மகாவலி திட்டத்தின்கீழ் நடைமுறைப்படுத்தும் மாதுறு ஓயா இடதுகரை அபிவிருத்தித் திட்ட விடயதானங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கும் விவசாயிகளுக்கும் தெளிவுபடுத்தும் விசேட கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் கடந்த திங்களன்று மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மகாவலித் திட்டத்தின்கீழ் விவசாய மேம்பாட்டுத் திட்டத்தை நோக்காகக்கொண்டு 1982ஆம் ஆண்டில் கட்டப்பட்ட முக்கிய நீர்த்தேக்கங்களில் ஒன்றாக மதுரு ஓயா நீர்த்தேக்கம் காணப்படுகின்றது. இத்திட்டத்தின்கீழ் மாதுரு ஓயா வலது கரை அபிவிருத்தித் திட்டம் முடிவுறுத்தப்பட்டிருந்தாலும் அதன் விரிவாக்க நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டங்களை இணைத்ததான மாதுரு ஓயா இடதுகரை அபிவிருத்தித் திட்ட வேலைகள் யுத்தச் சூழ்நிலை காரணமாக தடைப்பட்டிருந்தது.

தற்பொழுது இத்திட்ட வரைபானது அனுமதிக்கப்பட்டு அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் கோரளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலகப் பிரிவின் பேரிலாவெளி, முறுத்தாணை, குடும்பிமலை, வடமுனை, ஊத்துச்சேனை, புனானை மேற்கு, கள்ளிச்சை போன்ற 7 கிராமங்களும் ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச செயலகப் பிரிவின் ஈரளக்குளம் பிரதேசமும் அம்பாறை மாவட்டத்தின் ஒரு கிராமமும் உள்ளடங்குகின்றன.

மேலும் 10 கிராம மையங்கள், 3 குடிநீர் வசதித் திட்டங்கள், 220 கிலோ மீற்றர் நீளமான யானை வேலி, 15 கி.மீ. நீளமான பிபுரத்தவ பிரதான வாய்க்கால், 83 கி.மீ. நீளமான பிரதான மற்றும் கிளை வாய்க்கால்கள், 600 கி.மீ. நீளமான விநியோக வாய்க்கால்கள் உள்ளடங்கலாக இன்னும் பல அபிவிருத்தித் திட்டங்கள் உள்ளடங்குகின்றன. இது தொடர்பான விபரங்களை மாதுரு ஓயா இடது கரை அபிவிருத்தித் திட்டப் பணிப்பாளர் நிலந்த தனபால தெளிவுபடுத்தினார்.



மட்டக்களப்பு – கல்முனை பிரதான வீதியில் அதியுயர் மின்கம்பங்களை நடும் பணியில் இலங்கை மின்சார சபை ஊழியர்கள் ஈடுபட்டபோது புதுக்குடியிருப்பு பகுதியில் மின்சார சபைக்குச் சொந்தமான கனரக ரிப்பர் வாகனம் பாரம் தாங்க முடியாது திடீரென சரிந்து வீழ்ந்ததில் ஊழியர்கள் தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளனர். இதன்போது விபத்துக்குள்ளான வாகனத்தை பாரந்தூக்கியின் உதவியுடன் ஊழியர்கள் மீட்கும்போது பிடிக்கப்பட்ட படம்.

( படம் : பாண்டிருப்பு )

## மட்டு. பாவக்கொடிச்சேனையில் துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

( மட்டக்களப்பு )

மட்டக்களப்பு வவுணதீவு பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மாலை சட்டவிரோதமான உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கியுடன் ஒருவரை கைதுசெய்துள்ளதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய சம்பவதினமன்று வவுணதீவு பொலிஸ் பிரிவின் கீழ் உள்ள பாவக்கொடிச்சேனை பிரதேசத்தில் வீடொன்றில் பொலிஸார் மேற்கொண்ட சோதனையில் வீட்டில் சட்டவிரோதமான முறையில் மறைத்து வைத்திருந்த உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கி ஒன்றை மீட்டதுடன், 30 வயதுடைய ஒருவரை கைதுசெய்தனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## கேரளா கஞ்சாவுடன் பெண்ணொருவர் கைது!



(கந்தளாய்)

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பகுதியில் ஐந்நூறு கிராம் கேரள கஞ்சாவுடன் கிளிநொச்சியிலுள்ள பெண்ணொருவரை நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளதாக திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய பெண்ணொருவரையே திருகோணமலை பஸ் நிலையத்தில் வைத்து கஞ்சாவுடன் கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபரான கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த குறித்த பெண் யாழ்ப்பாண பஸ்ஸில் திருகோணமலைக்குச் சென்று திருகோணமலை பஸ் நிலையத்தில் ஐந்நூறு கிராம் கேரள கஞ்சாவை மற்றொருவருக்கு கைமாற்றுவதற்காக வைத்திருந்த நிலையில், திருகோணமலை தலைமையக போதைப்பொருள் குற்றத்தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அவரை கஞ்சாவுடன் கைதுசெய்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபரான பெண்ணை தடுத்துவைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு, திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



# ஹிஸ்புல்லாஹ்வின் தவறான குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஆராய அவசர சந்திப்பிற்கு தயார்

## - பொறியியலாளர் அப்துர் ரஹ்மான் அறிவிப்பு

(சாய்ந்தமருது)

கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாஹ்வினால் கூறப்பட்ட பாரதூரமான பொய்க் குற்றச்சாட்டுகள் மற்றும் விமர்சனங்கள் தொடர்பில் ஆராய அவருடன் அவசர சந்திப்பொன்றிற்குத் தயார் - என்று நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் பிரதித் தவிசாளர் பொறியியலாளர் அப்துர் ரஹ்மான் அறிவித்துள்ளார்.

இதற்கான அவசர சந்திப்பொன்றை ஏற்பாடு செய்யுமாறு கோரி காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்திற்கும் காத்தான்குடி உலமா சபைக்கும் அப்துர் ரஹ்மான் கடிதங்களை அனுப்பிவைத்துள்ளார்.

அவர் அக்கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது;

எமக்கும் சகோதரர் ஹிஸ்புல்லாஹ்வுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளை கடந்த தேர்தலுக்கு முன்னர் பள்ளிவாசல் சம்மேளனம் மற்றும் உலமா சபை பிரதிநிதிகளும் முன்னின்று நடத்தினீர்கள். அரசியல் நோக்கங்களுக்கப்பால் சமூக நன்மையை கருத்திற்கொண்டே அந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக உறுதியளித்திருந்தீர்கள். அந்த நோக்கங்களின் பெறுமதியை உணர்ந்துகொண்டதன் காரணமாகவே அவற்றில் நாமும் பொறுப்புடன் பங்கேற்றோம்.

கடந்த தேர்தலைப் பொறுத்தவரையில் எமது மண்ணுக்கான பிரதிநிதித்துவத்தை வென்றெடுப்பதுவே எல்லோரதும் பொது சமூக நோக்கமாக இருந்தது. அதற்காக பல்வேறு உபாயங்கள் பல்வேறு தரப்பினராலும் முயற்சிக்கப்பட்டது. ஒரு பதிவுசெய்யப்பட்ட அரசியல் கட்சி என்றவகையில் நாமும் அவ்வாறான பல முயற்சிகளைச் செய்தோம். முடியுமான எல்லா வழிகளிலும் முயற்சிக்குமாறு நீங்களும் எமக்கு ஆலோசனை வழங்கியிருந்தீர்கள்.

ஹிஸ்புல்லாஹ்வுடனான பேச்சுவார்த்தையை பொறுத்தவரையில் இறுதிநேரத்தில் மிகப் பெறுமதியான விட்டுக்கொடுப்புகளை செய்வதற்கு முடிவுசெய்து, அதனை அவருக்கு உடனடியாகவே அறிவித்தும் இருந்தோம். அவற்றை அவர் பொருட்படுத்தவுமில்லை. பேச்சுவார்த்தைகளை முன்னின்று நடத்திய தங்களுக்குத் தெரிவிக்கவும் இல்லை. எமது இறுதிநேர முன்மொழிவுகளை அவர் ஏற்றுக் கொண்டிருந்தால் எமது மண்ணுக்கான பிரதிநிதித்துவம் கடந்த தேர்தலில் மிக இலேசாக வென்றெடுக்கப்பட்டிருக்க முடியும். அதனை அவர் புறக்கணித்ததன் காரணமாக அது சாத்தியப்படவில்லை. இறைவனுடைய நாட்டத்தின்படியே எல்லாம் நடந்து முடிந்தது



என்ற நம்பிக்கையின் அடிப்படையில் நாம் எல்லோரும் அதனை பொருந்திக்கொண்டோம்.

மேலும், சமூக நோக்கங்கள் எனப்படுவது தேர்தலோடு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றல்ல. தேர்தல்களுக்கு அப்பாலும் எல்லா தரப்பினரும் இணைந்து சமூகத்துக்காக பங்களிப்பு செய்யவேண்டியுள்ளது. அதற்கான தேவை தேர்தலுக்குப் பிந்திய தற்போதைய சூழலில் இன்னும் அதிகரித்துள்ளதை எல்லோரும் உணர்கின்றனர்.

இருந்தாலும் தேர்தல் காலத்தில் அந்த நம்பிக்கையை பாதுகாக்கும் விதத்தில் ஹிஸ்புல்லாஹ் நடந்துகொள்ளவில்லை. எதிர்கால சமூக அரசியல் ஒற்றுமை பற்றி பொருட்படுத்தாமல் தேர்தலை மாத்திரம் குறியாக வைத்தே பல பொய்ப் பிரசாரங்கள் செய்யப்பட்டன. ஒரு கட்டத்தில் தங்களுடைய நிறுவனத்தின் பெயரையும் துஷ்பிரயோகம் செய்கின்ற அளவுக்கு அவர் சார்ந்த தரப்பினரால் பிரசாரங்கள் செய்யப்பட்டன. அதனை தங்கள் கவனத்திற்கு உடனடியாகக் கொண்டுவந்திருந்த நான் நடவடிக்கை எடுக்குமாறும் கோரியிருந்தேன்.

தற்போது தேர்தல் முடிவடைந்துள்ள நிலையில், மீண்டும் சமூக அரசியல் ஒற்றுமையை சீர்குலைக்கும் வகையில் பல மோசமான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட தொடங்கியிருக்கின்றன. இது எதிர்கால சமூக நலன்களுக்கு ஆரோக்கியமானதல்ல.

அரசியலைப் பொறுத்தவரையில் தனிநபர் பதவிகளுக்கப்பால் அரசியல் அதிகாரங்களைப் பெறுவதும் அதனை சமூகத்துக்காக பயன்படுத்துவதும் அதற்காக சகல தரப்பினர் மத்தியில் ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதுமே சமூக நோக்கமாகும்.

அந்த நோக்கத்திற்கு விரோதமான பல நடவடிக்கைகள் மீண்டும் மீண்டும் முன்னெடுக்கப்படுவது கண்டு கவலையும் விசனமும் அடைகின்றேன். இந்த விடயங்கள் தொடர்பில் ஹிஸ்புல்லாஹ்வுடன் உங்கள் முன்னிலையில் சமூக நலன்களை மையப்படுத்திய ஒரு விரிவான பேச்சுவார்த்தையை நடத்த விரும்புகிறேன். கடந்த தேர்தலுக்கு முன்னர் "ஹிஸ்புல்லாஹ் சார்பு அதிபர் குழு" முன்வைத்த கோரிக்கையை ஏற்று அவசர அவசரமாக கலந்துரையாடல்களை ஏற்பாடுசெய்தது போன்று தற்போது, நான் கோரியுள்ள கலந்துரையாடலை அவசரமாக ஒரிரு தினங்களில் ஏற்பாடுசெய்வீர்கள் என நம்பிக்கையுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றேன் - எனக் குறிப்பிட்டுள்ளார்.

## உதவி அரசாங்க பகுப்பாய்வாளராகத் தெரிவு

(ஒலுவில்)



2019ஆம் ஆண்டு அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட சந்தேகத்திற்கிடமான ஆவணங்கள் தொடர்பான உதவி அரசாங்கப் பகுப்பாய்வாளர் பதவிக்கான போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வு ஆகியவற்றில் ஜீஸான் முகம்மட் தெரிவாகியுள்ளார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை ஒலுவில் அல்-ஹம்றா மகா வித்தியாலயத்திலும் உயர் கல்வியை நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலையிலும் கற்று தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப் பிரிவில் பட்டம் பெற்றவராவார்.

தேசிய ரீதியாக நடைபெற்ற மேற்படி போட்டிப் பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்ட, நான்கு தமிழ் பேசும் நபர்களுள் ஒரேயொரு முஸ்லிம் சமூகம் சார்ந்தவராக ஜீஸான் முகம்மட் காணப்படுவதுடன், தனது சொந்த மண்ணில் இத்துறையில் தடம்பதித்த முதல் உத்தியோகத்தராகவும் இவர் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர் ஒலுவில் முதலாம் பிரிவைச் சேர்ந்த ஓய்வுபெற்ற சுகாதாரத்துறை உத்தியோகத்தர் ஐ.எல்.பதுறுசாஹிபு - கே.கைறுன் நிசா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வராவார்.

## அம்பாறை மாவட்டத்திலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ள ச.தொ.ச. ஊழியர்கள் கவலையில்

### ஜனாதிபதியிடம் முறையிட முடிவு



அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் கூ.மொ.விற்பனை நிலையங்களில் (சதொச) ஊழியர்கள் மாவட்டத்திற்கு வெளியே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதால் கடும் சிரமங்களை அவர்கள் எதிர்கொள்வதாக கவலை தெரிவித்துள்ளனர்.

திடீரென இவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டமை மட்டுமன்றி, புதிய இடங்களில் அவசரமாக பணிகளுக்குச் செல்லுமாறும் இவர்களுக்கு கடிதம் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தமது சொந்த மாவட்டத்தில் பணியாற்றிய இவ்வூழியர்கள் கொழும்பு, குருநாகல், கண்டி, காலி போன்ற தூரப்பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதால் அவர்கள் கடும் அதிருப்தியடைந்துள்ளனர்.

அதிகாரி ஒருவரின் ஒருதலைப்பட்சமான முடிவினாலேயே இவ்விடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகவும், மாதாந்தம் 21,000 ரூபாவையே அடிப்படைச் சம்பளமாகப் பெற்று வந்த இவர்களுக்கு வெளி மாவட்டங்களில் பணியாற்றுவது பொருளாதார ரீதியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துமெனவும் கவலைப்படும் இவ்வூழியர்கள், தொழிலுக்குச் செல்வதா அல்லது அவற்றைக் கைவிடுவதா என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள தம்மை அம்பாறை மாவட்டத்தின் எந்தப் பகுதிகளுக்காவது இடமாற்றுமாறும் இவர்கள் கோரியுள்ளனர்.

இவ்விடமாற்றம் சொந்த மாவட்டத்திலேயே நியமனங்கள் வழங்கப்பட வேண்டுமென்ற ஜனாதிபதியின் புதிய நியதியையும் மீறியுள்ளது. இதனால், தமக்கு ஏற்பட்டுள்ள அநீதி குறித்து ஜனாதிபதி மற்றும் அமைச்சர் பந்துல குணவர்தன, தேசிய காங்கிரஸ் தலைவர் அதாஉல்லா ஆகியோரிடம் தெரியப்படுத்துவதற்கு அம்பாறை மாவட்ட ச.தொ.ச. ஊழியர் சங்கம் தீர்மானித்துள்ளதாகவும் இதன் முதற்கட்டமாக மிக விரைவில், தேசிய காங்கிரஸ் தலைவரை இச்சங்கம் சந்திக்கவுள்ளதாகவும் தெரியவருகிறது.




## வாழைச்சேனையில் டெங்குவை கட்டுப்படுத்தும் வேலைத்திட்டம்



வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் பெருகிவரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த வாழைச்சேனை பொலிஸார், பிரதேச சபைகள், வைத்திய அதிகாரி அலுவலகங்கள் ஆகியவை இணைந்து இவ்வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளன .

அந்தவகையில், வாழைச்சேனை பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

வீடு வீடாகச்சென்ற டெங்கு ஒழிப்புக் குழுவினர் தென்னம் குறும்பை, யோகட் கப், வெற்றுப் போத்தல்கள், வெற்று டயர்கள், பொலித்தீன் கழிவுகள் போன்ற கழிவுகளை முறையாக அகற்றவேண்டுமெனவும் பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டனர்.

அத்தோடு, டெங்கு நுளம்புகள் பெருகும் வகையில் சூழலை வைத்திருந்த பலருக்கு எதிராக வழக்குப் பதிவுசெய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## கல்முனை நகரின் வயற்காணிகளுக்குள் கூட்டம் கூட்டமாக யானைகள் படையெடுப்பு

( கல்முனை)

கல்முனை பிரதான நகரில் அமைந்துள்ள பஸ் தரிப்பிடத்திற்குப் பின்னாலுள்ள பொதுமக்களின் வயற்காணிகளுக்குள் கூட்டம் கூட்டமாக யானைகள் படையெடுத்துவருகின்றன. மாலை வேளைகளில் கடந்த இரண்டு மூன்று தினங்களாக குறித்த பகுதிகளில் யானைகளின் நடமாட்டத்தையடுத்து மக்கள் பீதியடைந்துள்ளனர். இதனால் குறித்த வயல் காணிகளை அண்டிய பகுதிகளில் வீதி வழியாக மக்கள் பயணிக்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

இரவுவேளைகளில் அதிகளவிலான யானைகள் மக்கள் குடியிருப்புப் பகுதியை நோக்கி வந்துசெல்வதால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.

கல்முனை கிறீன் பீல்ட் வீட்டுத்திட்டம், நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு போன்ற இடங்களில் வயல் காணிகளை அண்டிய பகுதிகளில் வசித்துவரும் மக்கள் இந்த யானைகளின் வருகையைக் கண்டு தற்போது அச்சமடைந்துள்ளனர். இதற்கு முன்னரும் யானைகள் பல தடவைகள் கிராமங்களுக்குள் நுழைந்து உயிர்களுக்கும் உடமைகளுக்கும் சேதம் விளைவித்துள்ளன.

இந்த விடயம் குறித்து வனவிலங்கு அதிகாரிகள் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.







*சுவடுகள் தமிழர் அமையம் பாடசாலை மாணவர்களின் நலன் கருதி மூதூர் மணற்சேனையில் கடந்தவாரம் கல்வி நிலையமொன்றையும் சுவடுகள் தமிழர் அமையத்தின் உப அலுவலகத்தையும் திறந்துவைத்தது. இந்நிகழ்வில் முன்னாள் குச்சவெளி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சீ. மதியழகன், பாடசாலை அதிபர்கள், மாணவர்கள், அமையத்தின் உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து சிறப்பித்தார்கள்.*

## அறநெறி மாணவர்களுக்கு சீருடை வழங்கப்பட்டது

(அட்டாளைச்சேனை)

அக்கரைப்பற்று ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் இயங்கிவரும் அறநெறி பாடசாலை மாணவர்களுக்கு இந்து சமய கலாசார திணைக்களத்தின் மூலம் கையளிக்கப்பட்ட சீருடைகளை மாணவர்களுக்கு வழங்கிவைக்கும் வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆலய வளாகத்தில் இடம்பெற்றது.

ஓய்வுநிலை அதிபர் எஸ்.தட்சணாமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் போது ஆலையடிவேம்பு பிரதேச சபைத் தவிசாளர் டி.குறோஜாதரன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

அக்கரைப்பற்று ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் தலைவரும், ஓய்வுநிலை கோட்டக் கல்விப் பணிப்பாளருமான எஸ்.இராசமாணிக்கம், இந்து கலாசாரத் திணைக்களத்தின் கலாசார உத்தியோகத்தர் ரி.நிஷாந்தினி உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலர் இந்நிகழ்வின்போது அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

இப்பாடசாலையில் அறநெறிக் கல்வியைப் பெற்றுவரும் சுமார் 75 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு இதன்போது சீருடைகள் வழங்கப்பட்டன.

ஜனாதிபதியின் எண்ணக்கருவில், நாட்டிலுள்ள அறநெறிப் பாடசாலைகளை கட்டியெழுப்பி இதன்மூலம் பல்வேறு அபிவிருத்திகளை அறநெறிப் பாடசாலைகளில் ஏற்படுத்தும் திட்டத்தின் கீழ் இவ்வாறு சீருடைத் துணிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன்போது கலை, கலாசார நிகழ்வுகள் மேடையேற்றப்பட்டதுடன், அறநெறிக் கல்வியின் முக்கியத்துவம் தொடர்பிலும், அறநெறிக் கல்வியை மாணவர்களுக்குப் புகட்டும் முயற்சியில் பெற்றோர் கையாள வேண்டிய நடைமுறைகள் தொடர்பிலும் துறை சார்ந்த முக்கியஸ்தர்களால் சுட்டிக் காட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





## கோமாரி – ஊறணியில் நிலக்கடலை அறுவடை விழா

(திருக்கோவில்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தூரநோக்கு சிந்தனைக்கமைய உள்நாட்டு உற்பத்திகளையும் விவசாயிகளையும் மேம்படுத்தும் நோக்கில் விவசாயத் திணைக்களத்தினால் அம்பாறை - பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கோமாரி ஊறணி கிராமத்தில் விவசாய வாரத்தை முன்னிட்டு நிலக்கடலை அறுவடை விழா சம்பிரதாய ரீதியாக இடம்பெற்றது .

இந்நிகழ்வு கோமாரி ஊரணி கிராமத்தில் விவசாயப் போதனாசிரியர் கோ.சகீந்தன் தலைமையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றிருந்தது.

இதன்போது தமிழர் பாரம்பரிய முறையில் புதிர் எடுத்தல் மற்றும் பொங்கல் பூஜை வழிபாடுகள் என்பன இடம்பெற்றிருந்ததுடன், சம்பிரதாய முறையில் நிலக்கடலை புதிர் எடுத்தல் போன்ற நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தன.





இந்த நிலக்கடலை அறுவடை விழாவில் பொத்துவில் பிரதேச செயலாளர் ஆர்.திரவியராஜ் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன், உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ்.தேவராணி பாடவிதான உத்தியோகத்தர் கே.சுரேஸ்குமார், நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.யோகநாதன், கிராம சேவை உத்தியோகத்தர் ராஜேந்திரன் மற்றும் விவசாயிகள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.



காரைக்கவி
கந்தையா பத்மானந்தன்

# சீத்துவக்கேடு 69

உப்பிடி அப்புவும் ஆச்சியும் பனையின்ரை பெருமை பற்றி வாக்குவாதப்பட்டுக்கொண்டு நிக்க பொட்டுக்கால வந்த மலர் அஞ்சாறு பனங்காயளை அவையின்ரை ஆச்சி குடுத்துவிட்டவ எண்டு எங்கட ஆச்சியிட்டை குடுத்துப்போட்டு பனங்கொட்டை சூப்பிக்கொண்டிருந்த என்னை கடைக்கண்ணால ஒரு பார்வை பாத்துக்கொண்டு போனாள். என்ரை மனசு அப்பிடியே ஆடி பனை மாதிரி ஆடத்தொடங்கிட்டுது. சித்திரையில துடங்கிற நொங்கு சீசன் அப்பிடியே ஆடியிலை தொடங்கி ஐப்பசி வரை பனங்காய் சீசனா போய் முடியும்.

பனங்காய் சீசனிலை ஆச்சி, விடியக் காலத்தாலையே எழும்பு மோனை. உங்க ஆக்கள் போய் பொறுக்கிறதுக்கிடையில போய் பக்கத்தில தம்பையா பாட்டுக்குள்ளை போய் பனங்காய் பொறுக்கிக் கொண்டு வா வெண்டு எழுப்புவா. மோனை மோனை எண்டு கூப்பிட்டும் எழும்பாட்டில் சனியனே என்ன கொப்பனை மாதிரியே மூசி மூசிக் கொண்டு கிடக்கிறாய் எண்டு பச்சைத் தண்ணியை ஊத்துவா. உடன நான் விழுந்தடிச்சு கொண்டு எழும்புவன்.

எழும்பி முகம் கழுவாமலேயே குண்டியால விழுகிற காச்சட்டையை இழுத்து முடிஞ்சுகொண்டே விழுகிற பனங்காய் பொறுக்க உரப்பையோடையும் குஞ்சுக் கடகத்தோடையும் நான் போக அங்க பக்கத்து வீடுகளிலையுள்ள பெடி பெட்டையள் எல்லாம் பனங்காய் பொறுக்க எண்டு வந்து நிக்குங்கள். பிறகென்ன விடிய விடிய போட்டி போட்டு ஓடி ஓடி பனங்காய் பொறுக்குவம்.

நாங்கள் முந்தி எங்கட ஊரில இருக்கிற பனந்தோட்டங்களை பாடு எண்டுதான் சொல்லுறனாங்கள்.

தம்பையா பாடு மாதிரி இளையராமன் பாடு கண்டியான் பாடு சின்னத்தம்பி பாடு எண்டு நிறைய பாடுகள் இருந்தது. உப்பிடி பனங்காய் பொறுக்க போகேக்கை மலரும் வருவாள். ஆளையாள் பாத்து பாத்து உரசி உரசி பொறுக்கிறதுக்கிடையில் மற்றாக்கள் நிறைய பொறுக்கிப் போடுவினம்.

சில நாட்களிலை வெறும் கடகத்தோடை போய்க் கிழவியிட்டை ஆரையடா பாத்துப் பல்லு இளிச்சுப் போட்டு வெறும் கடகத்தோட வந்து நிக்கிறாய் எண்டு பேச்சும் வாங்கியிருக்கிறன். முந்தி எங்கட அயலட்டையிலை சில வீடுகளிலை கக்கூஸ் இல்லாததாலை அவை எல்லாருக்கும் தம்பையா பாட்டில் இருக்கிற பனைமர அடிகள்தான் தஞ்சம். பனங்காய் பொறுக்கப் போய் இருட்டுக்குள்ளை பனங்காய் எது மனுசற்றை கழிவு எது எண்டு தெரியாமல் நிறைய கஷ்டமும் பட்டிருக்கிறன்.

இப்பிடி ஒருமாதிரி கொண்டுவந்த பனங்காய்களிலை ஒண்டு இரண்டை நல்லா கழுவிப் போட்டு அடுப்புக்கை போட்டு சுடுவம். அப்பிடி சுடேக்கை பனங்காய் வெந்து நீர் வடியும். பாக்க சூடு தாங்காம அழுகிறமாதிரி இருக்கும். அப்பிடி சுட்ட பனங்காயை சூப்பிப் போட்டுத்தான் நாங்கள் பள்ளிக்கூடம் போவம். வேறை ஒண்டும் சாப்பிட மாட்டம்.

கொண்டு வாற பனங்காயளை எங்கட வீட்டில நிண்ட இலச்சுமிக்கும் ராசனுக்கும் போடுவம். எங்களோட சேர்ந்த குணமோ தெரியாது அதுகளுக்கும் பனங்காய் எண்டால் நல்லாப் பிடிக்கும். தனியார் தொலைக்காட்சியிலை நியூஸ் வாசிக்கிற பெண்டுகள் மாதிரி ஒரு பக்கமா தலைய தலைய ஆட்டி சாப்பிடுங்கள்.

பகலிலை உந்தப் பாடுகளுக்கை விழுகிற பனங்காயளுக்கெல்லாம் அவிட்டுவிட்ட மாடுகள்தான் சொந்தக்காரர். சிலநேரம் பனங்காய் சாப்பிடுற போட்டியில உந்த மாடுகளும் மனுசர் மாதிரி முட்டி மோதி இடிபட்டு கடைசியல ஒண்டும் சாப்பிடாமல் ஒண்டை ஒண்டு விட்டுத் துரத்திக்கொண்டு ஒழுங்கையளுக்கால ஓடியும் இருக்குதுகள்.

என்னண்டாலும் கட்டியிருக்கிற மாடுகளை விட அவிட்டுவிட்ட மாடுகள் குடுத்து வைச்சதுகள். அதுகள் நினச்ச நேரம் சாப்பிடும், நினைச்ச நேரம் தண்ணி குடிக்கும், நினைச்ச நேரம் படுக்கும், நினச்ச இடங்களுக்குப் போகும் வரும். நினைச்ச இடத்தில சாணி போடும். மூத்திரம் பெய்யும். நினைச்ச மாடுகளோடை இணையும். பார்க்க பார்க்க பொறாமையாயிருக்கும்.

மலர் பனங்காயை கொண்டுவந்து குடுத்துப் போட்டுப் போனதும் ஆச்சி, மோனை உனக்கு ஒரு விசயம் தெரியுமே. எங்கட பண்பாட்டோடை பாரம்பரிய சாப்பாடு முறைகளோட ஒட்டியதுதான் பனங்காய். ஆனா கனபேர் பனங்காய் சூப்பிறது என்னவோ நாகரீகக் குறைவு எண்டு நினைக்கினம் எண்டுவா.

ஆலத்தூர் கிழார் எண்ட புலவர் சோழன் நலங்கிள்ளியைப் பாராட்டிப் பாடேக்கை

"தலையோர் நுங்கின் தீங்சோறு மிசைய,
இடையோர் பழத்தின் பைங்கனி மாந்தக்,
கடையோர், விடுவாய்ப் பிசிரொடு
சுடுகிழங்கு நுகர,
நிலமார் வையத்து வலமுறை வளைஇ
வேந்துபீ டழித்த ஏந்துவேல்
தானையொடு" ( புறம் 225) எண்டுறார்.

அதாவது சேட்சென்னியின் மகன் நலங்கிள்ளி எண்டவன்ரை படை எவ்வளவு பெரியது எண்டு சொல்லவந்தவர் அதுக்கை எங்கட நொங்கு பனங்காய் கிழங்கு எண்டு எல்லாத்தையும் கெட்டித்தனமா நுழைச்சுப் போட்டார்.

அவன்ரை முன்னுக்கு போற படை நொங்கு குடிக்குமாம். நடுவில போற படை நொங்கு பழுத்து வந்த பனங்காயை சூப்புமாம். அப்பிடி அவங்கள் சூப்பிப் போட்டுப் போட்ட பனங்கொட்டை முளைச்சு வாற கிழங்கை பின்னால போற படை சாப்பிடுமாம். அவ்வளவு பெரிய படை அந்தப் படை எண்டுவா. உதில இருந்து எங்கட ஆக்கள் பல ஆயிரக் கணக்கான வருசங்களாக உந்தப் பனம் பண்டங்களைச் சாப்பிட்டிருக்கிறாங்கள் எண்ட விசயம் விளங்குது எண்டுவா ஆச்சி.

**(தொடரும்)**



---



# "கொரோனாவில் அரசியல் வேண்டாம்": உலக சுகாதார அமைப்பு கண்டனம்

## இந்தியாவில் ஒரே நாளில் 1,133 பேர் பலி!

பல்வேறு நாடுகள் கொரோனா வைரஸ் பாதிப்புக் குறித்து அரசியல் நோக்கத்தோடு தவறான தகவல்களைத் தெரிவிக்கின்றன. மக்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்த பல ஆண்டுகள் தேவைப்படும். ஆனால், சில விநாடிகளில் நம்பிக்கையை குலைக்க முடியும்" – என உலக சுகாதார அமைப்பின் தலைமை மருத்துவர் மைக்கேல் ரேயான் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் நோக்கத்தோடு திரிக்கப்படும் தகவல்களைத்தான் நாம் பெறுகிறோம் அல்லது ஆதாரங்களை சிதைக்கும் வகையில் செயற்படுகிறார்கள் என்பதை மக்கள் உணர்ந்தால், துரதிர்ஷ்டவசமாக பெரும் குழப்பத்துக்கு வழிவகுக்கும். தவறான தகவல்களை பரப்பும் அரசுகள் அரசியல் பின்னடைவை எதிர்கொள்ளக்கூடும். – இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### இந்தியாவில் ஒரே நாளில் 1,133 பேர் பலி!

இந்தியாவில் நேற்று ஒரு நாளில் மட்டும் 1,133 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர். அதுமட்டுமன்றி, நாடு முழுவதும் நேற்று ஒரே நாளில் 75,809 பேருக்கு கொரோனா உறுதியாகியுள்ளது.

இதனால் இந்தியாவில் கொரோனா தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை 42,84,103 ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை, உயிரிழந்தோரின் எண்ணிக்கை 72,843ஆக உயர்வடைந்துள்ளது.

33,24,060 பேர் குணமடைந்துள்ள நிலையில், சுமார் 8,83,697 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தமிழகத்தில் நேற்றுமட்டும் 89 பேர் உயிரிழந்த நிலையில், மொத்த உயிரிழப்பு 7 ஆயிரத்து 925 ஆக அதிகரித்துள்ளது.

### 9 இலட்சத்தை எட்டும் உலக கொரோனா பலி!

உலகளவில் கொரோனா பாதிப்பு 2.75 கோடியை எட்டியுள்ள நிலையில், உயிரிழப்புகளின் எண்ணிக்கை 8.97 இலட்சத்தை தாண்டியுள்ளது.

இதில் அமெரிக்கா மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அடுத்த இடத்தில் இந்தியாவும், 3ஆவது இடத்தில் பிரேஸில் ஆகிய நாடுகளும் உள்ளன.

உலகம் முழுவதும் கொரோனாவால் 2,75,10,603 பாதிக்கப்பட்டுள்ள நிலையில், 8,97,234 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை, உலகளவில் 1,96,05,194 பேர் கொரோனாவிலிருந்து குணமடைந்துள்ளமை பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவில் 64,85,708 கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 1,93,536 பேர் உயிரிழந்துள்ளனர். பிரேஸிலில் 41,47,794 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 1,27,001 பேர் உயிரிழந்துள்ளனர்.

# புதிய கொள்ளை நோயை எதிர்கொள்ள தயாராக இருங்கள்

## உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை!!

சுமார் 3 கோடி பேரை தனது ஆக்டோபஸ் பிடியில் வைத்திருக்கும் கொரோனாவிலிருந்து மீள்வதற்கு உலக நாடுகள் போராடி வருகின்றன. இந்தச் சூழலில் கொரோனாவை போல புதிய கொள்ளை நோய்கள் எதிர்காலத்தில் தாக்கக்கூடும் – என்று உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் டெட்ரோஸ் எதனோம் எச்சரித்துள்ளார்.

இது குறித்து உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் தெரிவிக்கையில்,

"இவற்றை சமாளிக்க உலக நாடுகள் பொது சுகாதாரத்தில் அதிகளவு முதலீடுகள் செய்யவேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். இது (கொரோனா) உலகின் கடைசி பெருந்தொற்று அல்ல. பெருந்தொற்றுகள் வாழ்க்கையின் ஓர் அங்கமாகவே மாறி இருப்பதை வரலாறு நமக்கு உணர்த்தியிருக்கிறது. அடுத்த பெருந்தொற்று உலகைத் தாக்கும்போது, அதனை எதிர்கொள்ள உலக நாடுகள் தயாராக இருக்க வேண்டும்" என்றார்.



மருத்துவத்துறையில் முன்னேறி இருக்கும் நாடுகள் கூட அடிப்படை பொது சுகாதாரத்துறை கட்டமைப்பில் கவனம் செலுத்தாமல் புறக்கணித்து இருப்பதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. கொள்ளை நோய்களை சமாளிக்க அடிப்படையாக இருக்கும் மருத்துவ கட்டமைப்பை மேம் படுத்துவதில், உலக நாடுகள் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அறிவுறுத் தப்பட்டுள்ளது.

---

## உலகச் செய்திகள்

# ஜோ பிடன் ஒரு முட்டாள்



குடியரசுக் கட்சி வேட்பாளர் ஜோ பிடன் ஒரு முட்டாள் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கொரோனா தடுப்பூசி குறித்து ஜோ பிடன், கமலா ஹாரீஸ் ஆகியோர் வதந்தி பரப்புவதாகவும் தங்களின் செயலுக்கு பிடன், கமலா மன்னிப்பு கேட்கவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

# சுசாந்த் சிங் மரணம்: நடிகை ரியா கைது!

சுசாந்த் சிங் மரணம் தொடர்பான போதைப்பொருள் வழக்கில் நடிகை ரியா சக்ரபோர்த்தி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிவுட் நடிகர் சுசாந்த் சிங், மும்பை பாந்த்ரா பகுதியிலுள்ள அவருடைய அடுக்குமாடி குடியிருப்பில் கடந்த 14ஆம் திகதி தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். இந்த விவகாரத்தில், அவரது காதலி ரியாவுக்கு தொடர்புள்ளது என தெரிவிக்கப்பட்டநிலையில், அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.



இதனடிப்படையில், அவருக்கு போதைப்பொருள் கடத்தல் கும்பலுடன் தொடர்பிருந்தமை தெரியவந்தது. இதனால அவர் மீது போதைப்பொருள் தடுப்புப் பிரிவு (என்.சி.பி.) சார்பிலும் வழக்குப் பதிவுசெய்யப்பட்டது. தொடர்ந்து அவர், அவரது சகோதரர் ஷோவிக், தங்கியிருக்கும் வீட்டிலும், சுசாந்த் மேலாளர் சாமுவேல் மிராண்டா வீட்டிலும் என்.சி.பி. அதிகாரிகள் சோதனை நடத்தினர். பின்னர் ஷோவிக், மிராண்டா மற்றும் சுசாந்தின் வீட்டு உதவியாளர் தீபேஷ் சாவந்த் ஆகியோரை என்.சி.பி. அதிகாரிகள் கைதுசெய்தனர்.

இதனைத் தொடர்ந்து ரியா சக்ரபோர்த்தியிடம் கடந்த ஞாயிறு மற்றும் திங்களன்று மும்பையிலுள்ள அலுவலகத்தில் வைத்து, என்.சி.பி.அதிகாரிகள் விசாரணை நடத்தினர். மூன்றாவது நாளாக நேற்றும் விசாரணை நடத்திய நிலையில், அவரை போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் கைதுசெய்துள்ளதுடன், அவருக்கு மருத்துவப் பரிசோதனை செய்யவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

# மன்னிப்பால் மரணதண்டனையிலிருந்து தப்பித்த ஜமால் கசோகி கொலையாளிகள்

துருக்கியில் பத்திரிகையாளர் ஜமால் கசோகியை கொலை செய்த குற்றவாளிகள் மரணதண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்டனர். ஜமால் கசோகியின் குடும்பத்தினர் அளித்த மன்னிப்பு காரணமாக குற்றவாளிகளின் தண்டனை குறைக்கப்பட்டுள்ளது.





சவூதியைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஜமால் கசோகி அமெரிக்காவின் வொஷிங்டன் போஸ்ட், நியூயோர்க் ரைம்ஸ் போன்ற நாளிதழ்களில் சவூதி அரசை தொடர்ந்து விமர்சித்து கட்டுரைகள் எழுதி வந்தார். குறிப்பாக, சவூதி இளவரசர் முகமது பின் சல்மானின் நடவடிக்கைகளை கடுமையாக விமர்சித்தார். சவூதியில் தன் உயிருக்கு உத்திரவாதம் இல்லை என்பதை உணர்ந்த கசோகி அமெரிக்காவில் குடியேறி அங்கேயே வசித்தார்.

இந்நிலையில், கடந்த 2018ஆம் ஆண்டு துருக்கியிலுள்ள இஸ்தான்புல் சவூதி தூதரகத்துக்கு தன் திருமணம் தொடர்பான ஆவணங்களைப் பெற கசோகி தன் மனைவி ஹோட்டிஸ் சென்ஜியுடன் துருக்கி தலைநகர் இஸ்தான்புல்லிலுள்ள சவூதி தூதரகத்துக்குச் சென்றார். தன் காதலியை சென்ஜி தூதரகத்துக்கு வெளியே நிற்க வைத்துவிட்டு கசோகி மட்டும் தூதரத்துக்குள் சென்றார். உடன் காலனும் சென்றான். தூதரகத்துக்குள்ளே சென்ற கசோமி மீண்டும் வெளியே வரவே இல்லை. தூதரகத்துக்குள்ளேயே கொலை செய்யப்பட்டு உடலை அமிலத்தில் கரைத்துவிட்டனர் கொலையாளிகள்.

உலகம் முழுவதும் இந்தக் கொலைச் சம்பவம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. சவூதி இளவரசர் முகமது பின் சல்மானின் தூண்டுதலின்பேரில்தான் கசோகி கொலை செய்யப்பட்டதாகவும் சொல்லப்பட்டது. எனினும், கசோகி கொலையில் தொடர்புடையதாக 8 பேரை கைதுசெய்து விசாரணை நடத்திய சவூதி அரசு 5 பேருக்கு மரணதண்டனை விதித்தது. இந்நிலையில், கடந்த மே மாதத்தில் இந்த வழக்கில் திடீர் திருப்பம் ஏற்பட்டது. அதாவது, கொலைசெய்யப்பட்ட கசோகியின் முதல் மனைவிக்கு பிறந்த மகன்கள் தங்களின் தந்தையை கொலை செய்தவர்களை மன்னித்துவிட்டதாக திடீரென அறிவித்தனர்.

இஸ்லாமிய சட்டத்தின்படி, கொலை குற்றவாளிகளுக்கு நீதிமன்றம் மரணதண்டனை விதித்திருந்தாலும், கொலையானவர்களின் குடும்பத்தினர் கொலையாளிகளை மன்னித்துவிடுவதாக அறிவித்தால் மரணதண்டனையிலிருந்து விலக்களிக்கப்படும் வாய்ப்புள்ளது. அந்தவகையில், கசோகியை கொலைசெய்தவர்கள் மரணதண்டனையிலிருந்து தப்பித்துள்ளனர். கசோகி கொலையாளிகளில் 5 பேருக்கு 20 ஆண்டுகள் சிறையும் ஒருவருக்கு 10 ஆண்டுகளும் மேலும் இருவருக்கு 7 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நடுவரை தாக்கிய சம்பவம்

## பகிரங்க மன்னிப்புக் கோரினார் ஜோகோவிச்



கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து கொண்ட அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடர் தற்சமயம் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற்றுவருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் நான்காவது சுற்று ஆட்டமொன்றில் சேர்பியாவைச் சேர்ந்த முதல்நிலை வீரர் நோவக் ஜோகோவிச், தரவரிசையில் 27ஆவது இடத்தில் காணப்படும் ஸ்பெயின் வீரர் பாப்லோ காரெனோ பஸ்டாவை சந்தித்தார்.

போட்டி ஆரம்பம் முதல் தடுமாற்றத்துடன் ஆடிய ஜோகோவிச், முதல் செட்டில் புள்ளிகளை இழக்க ஆரம்பித்தார். 5-6 என பின்தங்கிய நிலையில் இருந்ததால், ஆத்திரமடைந்த ஜோகோவிச் பந்தை தரையில் பின்னோக்கி வேகமாக அடித்தார். இதில் அந்தப் பந்து அங்கிருந்த பெண் எல்லைக் கோட்டு நடுவரின் கழுத்தில் பட்டு அவர் காயமடைந்தார். இதனால் பதறிப்போன ஜோகோவிச் அவரிடம் சென்று மன்னிப்புக் கேட்டதுடன், நிலைமையை விளக்கிக் கூறினார்.

இதனைத் தொடர்ந்து போட்டி விதிகளின் படி ஜோகோவிச் அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டார். இதனால் அமெரிக்க கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வெல்லும் வாய்ப்பை ஜோகோவிச் இழந்தார்.

இந்நிலையில், குறித்த சம்பவம் தொடர்பில் ஜோகோவிச் தெரிவிக்கையில், "இந்த மொத்த சூழ்நிலையும் என்னை கவலையாக வைத்து விட்டது. நான் எல்லைக் கோட்டு நடுவரை பரிசோதித்தேன். அவர் "சிறப்பாக இருப்பதாக உணர்கிறேன்" என்று சொன்னதால் கடவுளுக்கு நன்றி. அவருக்கு இதுபோன்ற மன அழுத்தத்தை கொடுத்ததற்காக மிகவும் வருந்துகிறேன். இது திட்டமிடாதது. இருந்தாலும் தவறு. அவருடைய தனியுரிமைக்கு மரியாதை கொடுக்கும் விதமாக பெயரை நான் வெளியிடவில்லை.

"இந்தத் தகுதி நீக்கத்திலிருந்து என்னுடைய ஏமாற்றத்தின் மீது கவனம் செலுத்தி, பாடம் கற்றுக்கொண்டு சிறந்த வீரராகவும், சிறந்த மனிதராகவும் வளரவேண்டியது அவசியம். அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடர் ஏற்பாட்டாளர்களிடம் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சூழ்நிலையில் எனக்கு மிகப்பெரிய அளவில் ஆதரவாக இருக்கும் என்னுடைய அணிக்கும், குடும்பத்திற்கும், எப்போதும் என்னுடன் இருக்கும் இரசிகர்களுக்கும் நன்றியுள்ளவனாக இருப்பேன்'' என மன்னிப்பு கேட்டுக்கொண்டார்.

# விளையாட்டு

thamilansports@yahoo.com

கிருத்தி – அகீல்

## முக்கிய வீரரை முதல் பாதியில் இழக்கும் ராஜஸ்தான்



ஆவது இந்தியன் பிரிமியர் லீக் தொடர் எதிர்வரும் 19ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஆரம்பமாகவுள்ள நிலையில், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியில் இடம்பெற்றுள்ள அணியின் முக்கிய சகலதுறை வீரர் பென் ஸ்டோக்ஸ் முதல் பாதி போட்டிகளில் பங்கேற்பதில் சிக்கல் எழுந்துள்ளது.

கிரிக்கெட் உலகில் சிறந்த சகலதுறை வீரர்களில் ஒருவராக கருதப்படும் இங்கிலாந்து அணியைச் சேர்ந்த பென் ஸ்டோக்ஸ் கடந்த மாதம் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடிக்கொண்டிருந்த நிலையில், நியூஸிலாந்தின் கிறைஸ்ட்சர்ச்சில் வசிக்கும் பென் ஸ்டோக்ஸின் தந்தையின் உடல்நிலை மோசமாகிவிட்டதாக தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து முதல் டெஸ்ட் போட்டியுடன் தொடரிலிருந்து வெளியேறி பென் ஸ்டோக்ஸ் இங்கிலாந்திலிருந்து நியூஸிலாந்துக்கு பயணமானார். நியூஸிலாந்து அரசின் கொரோனா வைரஸ் பாதுகாப்பு விதிமுறைகளின்படி வெளிநாட்டவர்கள் கட்டாயம் 14 நாட்கள் தனிமைப்படுத்தப்படுவார்கள். அந்தவகையில் பென் ஸ்டோக்ஸுக்கு 14 நாட்கள் தனிமைப்படுத்தல் நேற்று முன்தினம் தான் நிறைவுபெற்றது.

இதன் பின்னர் தற்போது பென் ஸ்டோக்ஸ் அவரின் தந்தையைப் பார்த்துவிட்டு, சில நாட்களை குடும்பத்துடன் செலவிடவுள்ளார். இதனடிப்படையில் தொடரின் முதல்பாதி லீக் போட்டிகளில் பென் ஸ்டோக்ஸ் விளையாட வாய்ப்பில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.

ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியில் முக்கிய நட்சத்திர வீரராகவும், ஆட்டத்தின் போக்கை தீர்மானிக்கும் வீரராகவும் திகழ்ந்த பென் ஸ்டோக்ஸ், அணியில் இல்லாதது அந்த அணிக்கு பெரும் பின்னடைவாகவே கருதப்படுகிறது. இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் பென் ஸ்டோக்ஸை ரூ. 12.5 கோடி விலைக்கு ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி கொள்வனவு செய்தமை குறிப்பிடத்தக்கது.

## லங்கன் பிரிமியர் லீக் 2020

## 190 வீரர்களில் 30 வீரர்களுக்கே வாய்ப்பு




இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் பிரமாண்டமான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'லங்கன் பிரிமியர் லீக்' இருபதுக்கு இருபது தொடரில் பங்கேற்பதற்காக சுமார் 190 வெளிநாட்டு வீரர்கள் விருப்பம் தெரிவித்துள்ளதாக இலங்கை கிரிக்கட் சபை தெரிவித்துள்ளது.

5 அணிகள் விளையாடவுள்ள 'லங்கன் பிரிமியர் லீக்' தொடரின் விதிமுறைகளின் 16 பேர் கொண்ட ஒவ்வொரு அணியிலும் 6 வெளிநாட்டு வீரர்கள் மாத்திரம் உள்ளடக்கப்படுவார்கள். போட்டியில் நான்கு வெளிநாட்டு வீரர்களுக்கு மாத்திரம் விளையாட வாய்ப்பு வழங்கப்படும். அந்த அடிப்படையில் குறித்த தொடரில் பங்கேற்கும் வெளிநாட்டு வீரர்களின் எண்ணிக்கை 30 ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், லங்கன் பிரிமியர் லீக் தொடரில் பங்கேற்பதற்காக விருப்பம் தெரிவித்துள்ள முக்கிய வீரர்களாக மேற்கிந்திய தீவுகளின் அதிரடி ஆட்டக்காரர் கிறிஸ் கெய்ல், மேற்கிந்திய தீவுகளின் விக்கெட் காப்பாளர் தினேஸ் ராம்டீன், இங்கிலாந்து வீரர் லுக் ரைட், பாகிஸ்தான் வீரர் சொஹைப் மலிக் மற்றும் பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவரும், அதிரடி துடுப்பாட்ட வீரருமான சஹிட் அப்ரிடி ஆகியோர் காணப்படுகின்றனர்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம் 6ஆம் திகதி வரை நடைபெறவுள்ள குறித்த தொடரில் மொத்தமாக 23 போட்டிகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முதலிடத்தை இணைந்து கைப்பற்றிய அவுஸ்திரேலியா – இங்கிலாந்து அணிகள்



அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான இருபதுக்கு இருபது தொடர் வெற்றியால் சர்வதேச கிரிக்கெட் பேரவையின் புதிய இருபதுக்கு இருபது தரவரிசையில் முதல் இடத்தை அவுஸ்திரேலியாவுடன் பகிர்ந்து கொண்டது இங்கிலாந்து அணி.

மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு இருபது மற்றும் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடர்களில் விளையாடுவதற்காக இங்கிலாந்து சென்றுள்ள அவுஸ்திரேலிய அணிக்கும் இங்கிலாந்து அணிக்குமிடையிலான இருபதுக்கு இருபது தொடர் தற்போது நடைபெற்று வருகிறது.

குறித்த இருதரப்பு தொடரின் முதல் தொடரான இருபதுக்கு இருபது தொடரின் முதல் போட்டியில் இங்கிலாந்து அணி 2 ஓட்டங்களினால் வெற்றிபெற்றிருந்த நிலையில், கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இரண்டாவது இருபதுக்கு இருபது போட்டியிலும் இங்கிலாந்து அணி 6 விக்கெட்டுகளினால் வெற்றிபெற்றது.

முதல் இரண்டு இருபதுக்கு இருபது போட்டிகளிலும் வெற்றிபெற்றதன் மூலம் புதிய இருபதுக்கு இருபது தரவரிசையில் அவுஸ்திரேலியாவுக்கு இணையாக இங்கிலாந்து அணியும் 273 புள்ளிகளைப் பெற்று முதல் இடத்தைப் பகிர்ந்துகொண்டுள்ளன. இதில் மூன்றாவது போட்டியில் வெற்றிபெறும் அணி முதலிடத்தை கைப்பற்றும்.



# பெனால்டி முறையில் சம்பியனானது அட்டாளைச்சேனை சுப்பர் சொனிக் விளையாட்டுக் கழகம்

(றியாஸ் இஸ்மாயில்)

அக்கரைப்பற்று சு சிற்றி விளையாட்டுக் கழகத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்ற 'சு சிற்றி வெற்றிக்கிண்ணம் 2020' உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அட்டாளைச்சேனை சுப்பர் சொனிக் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள 8 அணிகள் கலந்து கொண்ட இச்சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை மாலை நடைபெற்றது.

விலகல் அடிப்படையில் நடைபெற்ற இச்சுற்றுப் போட்டியில் அட்டாளைச்சேனை சுப்பர் சொனிக் அணியினரும், இறக்காமம் ஐ.ஆர்.எவ்.சீ. அணியினரும் இறுதிப்போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்டனர். இறுதி விசில் அடிக்கப்பட்ட வேளையில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோலை அடித்ததன் அடிப்படையில் போட்டியின் வெற்றியாளரை தீர்மானிக்க பெனால்டி மூலம் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.



இதன்படி 5-4 என்ற கோல்கள் அடிப்படையில் சுப்பர் சொனிக் கழகம் வெற்றி பெற்று 'சு சிற்றி 2020' வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டது. இரண்டாமிடத்திற்கான வெற்றிக்கிண்ணத்தை இறுதிப்போட்டியில் தோல்வியடைந்த ஐ.ஆர்.எவ்.சீ. அணி பெற்றது.





இறுதிப்போட்டியின் சிறந்த வீரராக சுப்பர் சொனிக் கழகத்தின் சிப்காரும், தொடரின் சிறந்த வீரராக ஐ.ஆர்.எவ்.சீ. கழகத்தின் றிசாட்டும் தெரிவு செய்யப்பட்டு அதிதிகளால் கிண்ணம் வழங்கப்பட்டன. இந்த இறுதிப்போட்டியின் பிரதம அதிதியாக அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர் அஸ்மி அப்துல் கபூர் கலந்துகொண்டார். மேலும் அக்கரைப்பற்று இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர், 'சு சிற்றி' விளையாட்டுக் கழகத்தின் பதவி வழி உத்தியோகத்தர்கள் மற்றும் நன்கொடையாளர்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7